வெள்ளி விழா மலர்

ஞானக்குழந்தை இல்லம் – அரசடி

1995

நிர்வாகம்: புலவர் கல்விக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஞானக்குழந்தை இல்லம்

பாலர் பாடசாலை

வெள்ளி விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

இ. ச. பேரம்பலம் சகநிறுவனம்

விற்பனையாளர்கள் :

LUMALA
ASIA துவிச்சக்கரவண்டிகள்
அதன் உதிரிப்பாகங்கள்
டயர் வகைகள்
நீர் இறைக்கும் இயந்திரங்கள்
பல்பொருள் வாணிபம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

E. S. P.

இல. 50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MRS. S. Sivanatham.

வெள்ளி விழா மலர்

ஞானக்குழந்தை இல்லம் - அரசடி

1970 - 1995

பதிப்பாசிரியர்:- செல்வி மைதிலி கணநாதன் B.A. (Hons)

அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகம்: பாலர் கல்விக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் கல்விக்கு வித்திட்ட அன்பு உள்ளத்திற்கு

சமர்ப்பணம்



★ அமரர். இ. இரத்தினகோபால் ★

(செயலாளர், பாலர் கல்விக் கழகம்)

பாலர் நம் கல்விக்கென பாங்கான
பாலர் கல்விக் கழகம் சமைத்து - ஓங்குபுகழ்
இரத்தினமாய் வையத்தில் வாழ்ந்து
ஆண்டு அறுபத்தியொன்றில் அமைந்தார் அரனடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கீதம்

ஞானக்குழந்தை இல்லம் வாழப் பாட்டுப் பாடுவோம்
நாளும் பொழுதும் நாங்கள் கூடி வாழ்த்துப் பாடுவோம்
வாழ்க வாழ்கவே ஞானக்குழந்தை இல்லம்
என்றும் வாழ்க வாழ்கவே!

கல்வி என்ற செல்வப்பயிர் வளர்க்கும் மேடையாம்
அன்போடு ஆடிப்பாடிப் பயிலும் சாலையாம்
வாழ்க வாழ்கவே ஞானக்குழந்தை இல்லம்
என்றும் வாழ்க வாழ்கவே!

எண்ணும் எழுத்தும் பொருள்களோடு இணைவுகாணுவோம்
என்றும் ஞானக்குழந்தையாக இன்பம் காணுவோம்
வாழ்க வாழ்கவே ஞானக்குழந்தை இல்லம்
என்றும் வாழ்க வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர் சிந்தனையில்....

ஞானக்குழந்தை இல்லம் - பாலர் பாடசாலை வெள்ளிவிழாக் கொண்டாடு வதையும், மலர் ஒன்றை வெளியிடுவதையுமிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்த வெள்ளிவிழா மலருக்குப் பதிப்பாசிரியராக இருக்கும் நான் இப் பாலர் பாடசாலையின் பழைய மாணவி என்பதிலும் பெருமையுண்டு எனினும் இம் மலரை முற்றிலும் இருவேறுபட்ட சூழ் நிலையில் பதிப்பிக்க வேண்டியதாயிற்று. அதாவது இம்மலரின் ஆக்கம் மிகக்கோலாகலமாக ஆரம்பமாகியது. இப் பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும், பாலர் கல்வியில் அதி சிரத்தை காட்டி முன்னெடுத்துச் சென்றவருமான இ. இரத்தினகோபால் அவர்கள் இவ் விழாவினைத் தனக்கு எடுக்கும் விழாப் போல எண்ணி ஆரம்பித்து வைத்தார். அவரது நெறியாள்கையில் இதற்கான அத்தனை வேலைகளும் நடைபெற்றன. வெள்ளி விழாவிற்கு நாள் கூடக் குறித்தும் சொன்னார். விழா நடைபெறும் வேளையில் அவர் அமரராகி விட்டார். அவர் தொடக்கி வைத்து முடிகிறதே தவிர விழாபற்றிய முன்னைய எதிர்பார்ப்பு அடியோடு அற்று விட்டது.

இந்த வெள்ளிவிழா மலர் கொண்டுள்ள ஆக்கங்கள், அறிவுறுத்தல்கள், பாலர் கல்வியில் முக்கியமானவை. இப் பாடசாலை ஸ்தாபகரின் நோக்கமும் இப் பாலர் பாடசாலையின் நோக்கமும், பாலர் கல்விக் கழகத்தின் நோக்கமும் இவ்வாறு தான் அமைந்துள்ளன.

நமது கல்விக் கொள்கையிலேயே பாலர் கல்வி பற்றி அக்கறை காட்டப் படாத போதும், சைவச் சிறார்களுக்குத் தமது சமயச் சூழலிலே அடிப்படைக் கல்வி வழங்குவது பற்றிச் சிந்தித்து இச் சிறு சமூகம் (பாலர் கல்விக் கழகம்) செயற்படுவது மிகவும் சிறப்பானதாகும். இதிலிருந்து நானும் பயனடைந்தவள் என்ற வகையிலே என்னால் இயன்றவற்றைச் இவர்களுக்கு செய்து வருகிறேன்.

இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளாகச் சேவை செய்து வரும் இப்பாலர் கல்வி நிறுவனத்தின் பணி மேலும் வளர வேண்டும். பணி செய்து மறைந்தவரின் பாதை தொடரப்பட வேண்டும்.

பாதை காட்டியவர் இல்லாமல் இம் மலரைப் பதிப்பித்து வெளியிடுவதை நினைக்கும் போது ஆறிட முடியாத துயரம் அழுத்துகிறது. அவருக்கே இந்த மலர் படையலாய் அமைவதால் அன்னாரின் ஆத்மா சாந்தியடையும்.

பதிப்பாசிரியர்
1995-06-01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசப்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளின்

ஆசிச்செய்தி

பேரன்பு மிக்க பெருந்தகையீர்,

திருஞானசம்பந்தப் பெருமானின் திருநாமத்தைத் தாங்கித் திகழும் பாலர் பாடசாலையான ஞானக் குழந்தை இல்லம் வெள்ளி விழா எடுக்க விருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். இன்னல்களும் இடர்களும் நிறைந்த கால கட்டத்திலும் தளர்வுறாது இப்பாடசாலை இயங்கி வருவது ஒரு சாதனை எனலாம். இதற்கு பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும், ஒற்றுமை, ஒத்துழைப்பு, விடா முயற்சிகளே காரணங்களாகும். இளமையிற் கல் என்பதற்கிணங்க, சிறார் உள்ளங்களிலே இப்போது விளங்கப்படும் திவ்ய தெய்வ நம்பிக்கை கல்வியில் ஆர்வம் நல்லொழுக்கம் ஆகியனவே நனிதே வளர்ந்து செழிப்புறும். பாலர் வகுப்பு ஆசிரியர்களை நாம் பாராட்டவேண்டும். பின்னர் உயர்வகுப்புகளிலும் உறுதுணை நிற்பன இவைதாம்.

பிள்ளைகள் சான்றோர்களாக வாழ வேண்டுமென எல்லாம் வல்ல பரம் பொருளின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனப் பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு "

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்

கழகக் காப்பாளரின்

ஆசிச்செய்தி

பாலர்களுக்கு எழுத்தறிவு ஊட்டுவதும் அவர்களை வழி நடாத்துவதும் பெரும் பணி. ஆழ்ந்த பொறுமைக்கும் நிறைந்த திறமைக்கும் இப்பணி ஒரு சவாலாகும்.

மொன்ரசூரி அம்மையார் இதற்காக வழி சமைத்த முன்னோடி இதற்கான வழிமுறைகளையும் வடிவமைப்புகளையும் தத்துவார்த்த பெருமைக்குரியவர் அவர்கள்.

மொன்ரசூரி அம்மையாரின் தத்துவங்களுக்கு அமையவே இங்கு பாலர் பாடசாலைகளை அமைத்து செயற்படுத்தி வருகிறார்கள்.

இளமையில் நாம் காட்டும் வழிமுறைகள் வாழ்க்கை பூராவும் பின் தொடர்வன.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது நமது ஆன்றோர் வாக்கு.

அந்த சிலையெழுத்தை வரைபவர்களை "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றும் நம் ஆன்றோர் கூறிப்போந்துள்ளனர்.

'ஞானக் குழந்தை இல்லம்' மேற்கூறிய பெரும் பணியினை இருபத்தைந்து ஆண்டுகளாகச் இயற்றி வருகின்றது என்பது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். இந் நல்லநாளில் ஞானக்குழந்தை இல்ல ஆசிரியர்களையும் நிர்வாகிகளையும் பாராட்டுவதில் உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன்

த. சண்முகலிங்கம் J. P.
(காப்பாளர்)
பாலர் கல்விக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் கல்விக்கழகத் தலைவரின்

ஆசிச்செய்தி

எண்பது ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக் கூடத்தில் தொடங்கிய என் கல்வித் தொடர்பு இடையறாது இன்று வரை நீடித்திருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றுள் பாலர் கல்விக் கழகத்தினூடான தொடர்பும் ஒரு காரணமாகும். பாலர் கல்விக் கழகத்தின் செயலாளரும் கண்காணிப்பாளருமான திரு. இ. இரத்தினகோபால் அவர்களின் வழி நடத்தலில் ஆரம்பித்துப் பல பாலர் ஞானக்குழந்தை இல்லங்களை நாமிருவரும் பார்வையிடுதல் வழக்கம். அவ்வில்லங்களில் இன்று வரை என் மனத்தை கவர்ந்து வந்தனவற்றிலொன்று அரசடி ஞானக் குழந்தை இல்லமாகும். இங்கு பல ஆண்டுகளாகக் கற்பித்தவர் செல்வி. செல்வராணி மாரிமுத்து எனலாம். அவரது கற்பித்தற் காலத்தில் அரசடி ஞானக் குழந்தை இல்லம் பல துறைகளில் முன்னேறி வந்தது. விளையாட்டு, கலை நிகழ்ச்சி, பேச்சு வன்மை முதலியவற்றில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் முதலிடத்தை வகித்து வந்தது. இன்றும் இப் பாலர் பாடசாலையை நடத்தும் ஆசிரியப் பெண்மணிகள், பெற்றோர் பக்கப் படையாக நின்றுதவ முதலிடத்தை வகித்து வருகின்றது. இதற்கோர் சான்று அண்மையில் அரசடி ஞானக் குழந்தை இல்லத்தில் நடைபெற்ற கண்காட்சி. பிள்ளைகளுக்கும், பிள்ளைகளாலும் நடந்தது. செல்வி. அருந்ததிதேவி குலநாயகத்தினதும் உடன் ஆசிரியர்களினதும் பெரு முயற்சி என்று எனக்குத் தோன்றியது.

இப்போது இவர்களின் ஒரு சிறந்த முயற்சி வெள்ளி விழா மலர் வெளியீடு எனலாம். பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், இவ்வித மலர்களை வெளியிடுவது சாதாரண நிகழ்வு எனலாம். ஆனால் ஒரு பாலர் பாடசாலை இவ் வகையில் தொழிற்படுவது மிக மிக அரிது. எனவே இம் முயற்சி இனிது நிறைவுற எனது மனப் பூர்வமான ஆசிகளை வழங்குகிறேன். எதிர் காலத்தில் பாடசாலைகள் இடையூறு இன்றிச் சேவைபுரிய வேண்டும். விரிந்து வளர வேண்டும் என்பது எனது விருப்பம்.

பாலரது கல்வி வளர்ச்சியில் இப் பாடசாலை சிறப்புற்று மேன்மை பெற எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

ஆ. செல்லையா
(ஓய்வு பெற்ற அதிபர்)

பாலர் கல்விக் கழகம்
49/5, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மில்க்வைற்' தொழிலதிபரின் ஆசிச்செய்தி

ஞானக்குழந்தை இல்லம்

'பாலர்தான் மனிதனின் தந்தை'

'Child is Father of the Man' என்ற ஆங்கில மகாகவி ரெனிசன் பிரபுவின் கூற்று வியப்புத்தந்தாலும் சிந்திப்போருக்கு அக்கூற்றின் பேருண்மை புலனாகும்.

மனிதனை உருவாக்குவது பல்கலைக்கழகங்களோ கல்லூரிகளோ அல்ல. பாடசாலைக் கல்விக்கு முன் பாலர்களுக்குக் கிடைக்கும் போதனையும், பயிற்சியும், நற்பழக்கங்களும், பண்புகளும் கூட்டு முயற்சிகளும் தான் மனிதனை உருவாக்குகின்றன. இந்த வகையில் அவரவர் இல்லங்களில் கிடைப்பதிலும் பார்க்கப் பாலர் கல்விக் கழகங்கள்தாம் பாலர்களுக்கு உதவி வருகின்றன.

யாழ்ப்பாணம் அரசடி வீதியில் உள்ள ஞானக்குழந்தை இல்லம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தக்கோரின் வழி நடத்துதலிலும் அனுபவம் மிக்க ஆசிரியைகளின் அன்புப் பிணைப்பிலும், அனுசரணையிலும் மாபெரும் மனிதர்களாக மிளிரும் வகையில் பாலர்களைப் பயிற்றிவருகிறது.

இவ்வெள்ளி விழா ஆண்டிலே பல்லாண்டு பல்லாண்டு ஞானக்குழந்தை இல்லம் தன் தொண்டைத் தொடர வாழ்த்துகிறோம்

வையகம் வாழ்க வாழ்க வழமுடன்

க. கனகராசா J. P.
உரிமையாளர், மில்க்வைற் தொழிலகம்
காப்பாளர், பாலர் கல்விக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா மலர்க்குழு - 1995

இருப்பவர்கள் செல்வி. கு. ஜெயகௌரீ
இடமிருந்து:- திரு. இரா. ஸ்ரீதரன் (கழகப் பத்திராதிபர்)
செல்வி. க. மைதிலி B. A. (Hons) (பதிப்பாசிரியர்)

நிற்பவர்கள்: திரு. த. தருமராசா
இடமிருந்து திரு: சி. முருகையா (உப தலைவர்)
திரு. க. ஜெகதீஸ்வரன்
திரு. ம. இரகுநாதன் M· A.
(முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை செயலரின்

ஆசிச் செய்தி

அன்புடையீர்,

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை"

'வண்ணத் தமிழ் வாசல்' என்று கருதப்படும் பாலர் பாடசாலைகளில் அரசடி ஞானக்குழந்தை பாலர் பாடசாலை இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து வந்து இன்று வெள்ளி விழா காணுவதையிட்டு பெரு மகிழ்வடைந்து, மேலும் அது வளர்ச்சிகாண வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

கடந்த சில வருடங்களுக்கு முன் எம்மவர் மத்தியில் ஏற்பட்ட புலப் பெயர்வின்பின் பாலர் கல்விக்கழகத்துடனும், அவர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகளினதும் உறவை ஏற்படுத்திக் கொண்டோம். காரைநகர் மாணவர்களும், ஆசிரியைகளும் இணைந்து மேலும் பெரு மதிப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசடி ஞானக் குழந்தை பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பாடத்திறனையும், ஒழுங்கு முறையினையும் கடந்த சில வருடங்களாக நாம் நடாத்தும் போட்டிகளின் மூலம் நன்கு தெரிந்து கொண்டோம்.

வண்ண வண்ணச் சொல்லெடுத்து சொல்லித் தந்த செந்தமிழ் பாட்டென்று பாலர் போற்றும் ஆசிரியைகளின் பெரும் பங்கு இந்தப் பாலர் பாடசாலையின் வெள்ளி விழாக்காணும் வளர்ச்சிக்கு வித்திட்டமை யாவரும் அறிந்த உண்மையாகும்.

இப் பாலர் பாடசாலையின் நற்சேவை யாவருக்கும் கிடைக்க வேண்டுமெனவும், நல்ல கல்விமான்களை தோற்றுவிக்கப்போகும் இந்தப் பாலர் பாடசாலை வளர்ச்சி காணவேண்டும் எனவும் எல்லாம் வல்ல வாரிவளவு கற்பக விநாயகரை வேண்டிக் கொள்கின்றோம்.

வணக்கம்

148/10, புங்கையிரதநிலைய வீதி,
யாழ்ப்பாணம்

ச. பத்மநாதன்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாசிரியையின் நாவிலிருந்து.......

இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து வெள்ளிவிழாக் காணும் இவ்வேளையில் அரசடி ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியையாக நான் இருப்பதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். 1992 ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலையின் ஆசிரியையாக இணைந்து கொண்ட நாள் முதல் என்னால் இயன்றவரை பாலர்களின் கல்வியில் அக்கறை காட்டி வருகின்றேன். உலக அறிவைத் தெரிந்து கொண்ட மாணவருக்கு பாடம் புகட்டுவதை விட, பாலர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது எவ்வளவு கடினம் என்பது நான் சொல்லாமலே புரியும். பாலர்களுடன் எவ்வாறு பழகிக் கொள்ள வேண்டும் என்பதையும், பாலர்களுக்கான பாடத்திட்டம் பற்றிய விளக்கங்களையும் பல தடவைகள் பல பயிற்சி வகுப்புக்களில் நடாத்தப்பட்ட முன்பள்ளி கல்விப் பயிற்சியின் போது கற்றுக் கொண்டமையால் எளிதாக அமைந்து கொண்டது.

எமது பாடசாலை வாழையடி வாழையாக செந்தமிழைச் செம்மையாகச் சொல்லிக் கொடுத்து நன்மாணாக்களை உருவாக்கிய பெருமை, பாடசாலையில் கல்வி கற்று உயர் வகுப்புகளுக்குச் சென்ற மாணவர்களின் பெற்றோர் இன்றுவரை நன்றிமறவாமையிலிருந்து தெரிகிறது. பாடசாலையில் நடாத்தப்படும் பேச்சுப்போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு கூடிய புள்ளிகளைப் பெற்றுவந்துள்ளது எமது பாடசாலை மாணவர்கள், பாலர் கல்விக்கழகத்தினால் நடாத்தப்படும் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் தக்க இடங்களைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மாணவரின் கைத்திறனை வெளிக்கொணரும் முகமாக கைப்பொருள்களையும், சித்திரங்களையும் ஒருங்கமைத்து பொருட்காட்சி நிகழ்வாக அமைத்து வந்துள்ளோம். இப்படியாக எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் என்னுடன் உறு துணையாக நிற்கும் சக ஆசிரியைகள் செல்விகள்: சிவமனோகரி இராஜேந்திரம், சசிதேவி சண்முகநாதன். ஜெயகௌரி குணரத்தினம் ஆகியோரது 'கடமையுணர்ச்சிக்கு எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது பாடசாலை வெள்ளிவிழாக் காணுமளவிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்த பெற்றோர்களுக்கும், வித்திட்ட பாலர் கல்விக் கழகத்தினருக்கும், மற்றும் தோன்றாத்துணையாக நின்று பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது பாடசாலை சார்பில் நன்றியைத் தெரிவித்து. எமது அரசடி ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலை அறுகுபோல் வேரூன்றி ஆல் போல் தழைத்து வளர வேண்டுமென காரைநகர் திக்கரை முருகப்பெருமானை வேண்டி அமைகின்றேன்.

" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

ஞானக்குழந்தை இல்லம்,
இல : 71/32, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

செல்வி. அருந்ததிதேவி குலநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை - துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வெள்ளி விழாக் காணும் ஞானக்குழந்தை இல்லம்....

''ஞானமும் கல்வியும் நயத்தலிது'' என்பது ஒளவையின் வாக்கு. குழந்தைப் பராயத்தில் இந்த அடிப்படையில் பிள்ளைகளை வளர்க்க முயற்சிக்க வேண்டும். இந்தத் தலைமுறையில் குழந்தைகளாய் இருப்பவர்கள் அடுத்த தலைமுறையில் பெற்றோர்களாகவும், பேரறிஞர்களாகவும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகவும் மாறமுடியும். எனவே இன்றைய சிறு குழந்தைகளுக்கு உள்ளத்தெளிவும், ஒழுக்க உணர்வும், தெய்வ நம்பிக்கையும் ஏற்படக்கூடிய கல்வி புகட்டப்பட வேண்டும். இவர்களின் வளர்ச்சி எண்ணும் எண்ணத்திலும், உண்ணும் உணவிலும்; வாழும் சூழலிலும் உருவாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டதே ஞானக்குழந்தை இல்லமாகும்.

பாலர்கள் இந்த நாட்டின் மகத்தான சொத்துக்கள். அவர்கள் எப்படி வளர்க்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தே நாட்டின் வருங்காலம் அமைய இருக்கிறது. பிள்ளைகளுக்கு தொடக்கக் கல்வி மிகவும் அவசியமாகும். அது எழுத்தும், வாசிப்பும், கணிதமும் என்று இருக்கக் கூடாது. பண்பாட்டை வளர்க்கக் கூடிய நடிப்பும், விளையாட்டும், ஆட்டமும், பாட்டும் என்று அமைய வேண்டும். இதனால் குழந்தைகள் சிறு வயதிலேயே ஒருவரையொருவர் பாராட்டவும், ஒருவரோ டொருவர் பழகவும், இணைந்து செயற்படவும் வழி பிறக்கிறது. குழந்தைகளின் கல்வியில் கலையம்சமும், பண்பாட்டு அம்சமும், ஒழுக்கமும், ஒழுங்கும் புகட்டப்பட வேண்டும். இவர்களின் வளர்ச்சியில் பெற்றோர், ஆசிரியர், அரசு ஆகிய முத்திறத்தாருடைய பங்கு அவசியம். இன்று அரசுச்சார்பற்ற பல்வேறுபட்ட புனர்வாழ்வு நிறுவனங்கள் இத்தகைய பணிகளுக்கு உதவ முன் வந்துள்ளன.

குழந்தையின் அறிவு வளர்ச்சியில் கடவுள் நம்பிக்கை நல்லபடி இணைந்துகொள்ள வேண்டும். இந்த நம்பிக்கையை வளர்ப்பதில் ஆசிரியர்களின் அன்புநெறி முக்கியமானது. குழந்தைகளே கடவுளின் தூதர்கள். குழந்தைகள் இல்லையென்றால் உலகம் பெருந்துயர் கொண்டதாகவே காட்சியளிக்கும். எமக்கு இரக்கத்தையும், அன்பையும், பரந்த இதயத்தையும் ஏற்படுத்தவே இறைவன் குழந்தைகளைத் தெய்வநிலைக்கு உயர்த்த வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. இதற்கு ஒரு பிள்ளை பிறந்த மதம் எதுவோ அந்த மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும் விசுவாசமும் வைக்கப் பழக்கிக்கொள்வது ஆசிரியர்களின் கடன். குழந்தைகளை மதம் மாற்றும் தொழிலில் ஆசிரியர் ஒரு பொழுதும் ஈடுபடக்கூடாது. இதனால் வளர்ந்து வந்து நற்பிரஜையாகும் நேரத்தில் அப்பிள்ளைக்கு இவ்வாசிரியரே ஒரு விரோதியாகக் காணப்படுவார். ஆசிரியர்கள் சமயம் போதிக்கும் நடுவுநிலைமை யாளர்களாக அந்த அந்தப் பிள்ளைகளின் தாய் மதத்திற்கு மதிப்புக்கொடுத்து வாழப் பழக்கிக் கொள்ள வேண்டும். மதம்மாற்றும் தொழிலில் ஒரு ஆசிரியர் ஈடுபட்டால் அல்லது எள்ளி நகையாடி பிற மதங்களைத் தூஷித்தால் அவர் ஆசிரியர் உலகிற்கே களங்கம் தேடுபவராக அமைவார்.

ஒரு குழந்தையின் முழுமையான வளர்ச்சியில் எவ்வாறு பலருடைய பங்கும் அமைகிறது என்பதனை பொன்முடியார் என்ற புலவர் பாடியுள்ளார். இளமையிற் கல்வி என்பது ஒரு பொன் மொழி. இந்தக் கல்வியினால் ஏற்படும் வளர்ச்சி ஒருசிலரின் வளர்ச்சியைக் கொண்டதல்ல. அது ஒரு சமூகத்தை முற்றாக வளர்க்கும் கல்வியே எமக்குத் தேவை. பணம்படைத்த ஒருசிலர் தங்களின் பிள்ளைகளின் கல்விக்காக முயற்சி எடுக்கிறார்கள். பாமர மக்களிடத்திலும் இந்த நிலையை வளர்க்க எம்மாலான ஊக்குவிப்பு அவசியமாகும். எனவே ஞானக்குழந்தை இல்லப் பணிகளையும் அயராதுழைக்கும் ஆசிரியப் பெருமக்களையும் வாழ்த்தி அமைகின்றோம்.

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம் – தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்குழந்தை இல்லம் - அரசடி



ஆசிரியைகளும்

கல்வி பயிலும் மாணவச்செல்வங்களும் - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்குழந்தை இல்லம் - அரசடி

ஆசிரியைகளும்
கல்வி பயிலும் மாணவச்செல்வங்களும் - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளிகைப் பொருட்கள்

★ மலிவு விலையில் பெற்றுக்கொள்ள ★

வர்ணிகா

களஞ்சியம்

சந்திரச் சந்தி, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

பட்டுப் பிடைவைகள், றெடிமேட் ஆடைகள், சேட்டிங் - சூட்டிங் வகைகளுக்கு

சிவகணேசன்

பட்டுச்சோலை

41, பெரியகடை :-: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி ஞானக்குழந்தை இல்லம் வெள்ளிவிழா மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

யாழ் காலணி விற்பனை நிலையம்

(YARL TRADES CENTAR)

AGENTS FOR BATA

* ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் *

அனைவருக்கும் ஏற்ற நவ நாகரீக புதுப்புது டிசைன்களில்

உங்கள் எண்ணம் போல்

காலணிகளை தெரிவு செய்திட

யாழ்

காலணி விற்பனை நிலையம்

இல: 11, நவீன சந்தை, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with best compliments from

NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD,
JAFFNA.

ஞானக்குழந்தை இல்லம் அரசடி

வெள்ளி விழா மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

குகன் களஞ்சியம்

180 (380), மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்குழந்தை இல்லம் - அரசடி

வெள்ளி விழா மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

தூய சுவையான தரமான

★ சைவ உணவு வகைகளுக்கு ★

யாழ் நகரில்

ஸ்ரீ தாமோதர விலாஸ்

சைவ உணவகம்

காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் கல்வியில் உளவியல்

கலாநிதி. சபா. ஜெயராஜா

உற்பத்தி வணங்களை மீள் உற்பத்தி செய்த பொழுது தொல்குடி மக்கள் பெருமிதம் அடைந்தனர். இந்தக்கண்ணோட்டத்திலேதான் விலங்குகள் தமது குட்டிகளைப் பராமரிப்பதற்கும், மனிதர் தமது குழந்தைகளைப் பராமரிப்பதற்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. குழந்தைகளை விளங்கிக் கொள்ளல் வாயிலாகத் தம்மை விளங்கிக் கொள்ளத் தொல்குடி மக்கள் முயன்றனர்.

பொருளாதார உற்பத்தியில் மனித உடற்பலம் மேலோங்கியமை குழந்தைகள் பற்றிய அணுகுமுறையிலே நேரடியான செல்வாக்கினை ஏற்படுத்தின. மத்தியகால ஓவியங்களிலும், சிற்பங்களிலும் சிறுவர்கள் வளர்ந்தோரின் உடற்கட்டைக் கொண்டவர்களாகவே காட்டப்பட்டனர். சிறுவர்களுக்குரிய தனித்துவமான கல்விமுறைமை பற்றிய சிந்தனை பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தீவிரம் பெறத் தொடங்கியது. வளர்ந்தோரிலும் வேறுபட்டதும் தனித்துவம் மிக்கதுமான அணுகுமுறைகள் சிறுவர்களுக்கு வேண்டப்படுகின்றன என்ற கருத்தை ஜோன் லொக் (1632 - 1704) முன்வைத்தார். சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தடுக்கப்படல் வேண்டும் என்பதும், அவர்கள் விரும்பும் விளையாட்டுக்களில் ஈடுபட அனுமதித்தல் வேண்டும் என்பதும் அவரது கருத்துக்களாக அமைந்தன.

தமிழர் கல்விப் பண்பாட்டில் சிறுவர்கள் பற்றிய அணுகுமுறை பிள்ளைத்தமிழ் இலக்கியங்களினால் புலப்படுத்தப் படுகின்றது. குழந்தைகளின் வளர்ச்சியில் நிகழ்ந்த "படிமுறை" முன்னேற்றங்கள் பற்றிய அறிவு காணப்பட்டமைக்குப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் சான்றாகவுள்ளன.

குழந்தைகள் பாபத்தின் சின்னமாகவே பிறக்கின்றார்கள் என்ற கருத்து வலிமை பெற்றிருந்த ஐரோப்பிய சூழலில் ரூசோ (1712-1778) முன்வைத்த கருத்துக்கள் மாறுபட்டமையாக அமைந்தன. சிறுவர்களின் முதிர்ச்சி நிலைகண்டு கற்பித்தல் வேண்டும் என்பதும்; சமூகத்தின் தலையீடுகள் குழந்தைகளை விரக்தியடையச் செய்துவிடுகின்றன என்பதும் அவரது கருத்துக்களாக அமைந்தன. குழந்தைகள் சூழலால் உருவாக்கப்படவில்லை; சூழலை உருவாக்குகின்றார்கள் என்ற அவரது கருத்து பின்வந்த உளவியலாளர் மீது செல்வாக்கினைப் பதித்தது.

குழந்தைகளுக்கான கல்வி முன்னெடுப்புக்களில் பெஸ்ரலோஜி (1746 - 1827) மேலும் பங்களிப்புக்களை வழங்கினார். குழந்தைகளின் நடத்தைகளை விளக்கிக் கொள்வதுடன் அவற்றுக்கு மதிப்பளித்தல் வேண்டும் என்பதும் வற்புறுத்தப்பட்டன. தாயாரே குழந்தைகளின் முதல் ஆசிரியராக விளங்குகின்றார்கள். குழந்தைகளின் புலன் உணர்வுகள், உற்றுநோக்கும் திறன் முதலியவற்றை வளர்ப்பதில் தாய்மாரே பெரும்பங்கு வகிக்கின்றனர். தாய்மார்களின் இந்தக் கற்பித்தற்பணி மிகவும் பொறுப்பு வாய்ந்தது என்பதும் அவரது கருத்துக்களாக அமைந்தன.

குழந்தை தொடர்பான வளர்ச்சி வரலாற்று அவதானிப்புக்களை தமது குழந்தை மகனை ஆதாரமாகக் கொண்டு சார்ல்ஸ் டார்வின் (1809 - 1882) நாட்குறிப்பு நூலாக வெளியிட்டார். விலங்குகளில் இருந்து மனிதர் படிமலர்ச்சி கொண்டனர் என்பதும் விலங்குகளுக்கும் மனிதருக்குமிடையே உள்ள இணைப்பைக் குழந்தைகள் புலப்படுத்துகின்றனர் என்பதும் அவரால் வலியுறுத்தப்பட்டன. குழந்தைகளின் தவழல் மீன்கள் நீந்துதலைப் புலப்படுத்துகின்றது. அவர்கள் தாவி ஏறுதல் முலையூட்டி விலங்குகளின் அசைவுகளைக் காட்டுகின்றன. அவர்களின் விசைநடையும் ஓட்டமும் மனிதர்களின் அசைவுகளை விளக்குகுன்றன.

குழந்தைகள் தொடர்பான நவீன கல்வி இயக்கத்தை முன்னெடுத்தவர்களுள் ஸ்ரான்லி ஹோல் (1844 – 1924) விதந்து குறிப்பிடப்படுகின்றார். நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வினாக் கொத்துக்களை வழங்கி அவற்றை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளின் விருப்பங்கள், பயம், கனவுகள், இயக்கத்திறன்கள் தண்டனைகள் பற்றிய உணர்வுகள், வழிபாடு பற்றிய உணர்வுகள், இசை பற்றிய உணர்வுகள் முதலியவற்றை அவர் வெளியிட்டார். அவரது ஆய்வுகளிலே அகவயக் கலப்புக்கள் இருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக் கல்வி தொடர்பான ஆய்வுகளுக்குப் புதிய பரிமாணங்களை அவை வழங்கின.

குழந்தைகள் சிறுவர்களுக்கான கல்வியில் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் செல்வாக்குகள் வலிமையான பாதிப்புகளை ஏற்படுத்துதில் மார்க்ஸியக் கல்வியாளர்களினாற் சுட்டிக் காட்டப்பட்டன.

பாலர் கல்வியில் இந்த அணுகுமுறை பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியது. இலம்பாடு கொண்ட சிறுவர்களுக்கும், நுண்மதி வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற இயக்கங்கள் மேலோங்குவதற்கு மார்க்ஸிய விசை துணை செய்தது.

உளவளர்ச்சி குறைந்த சிறுவர்களை இனங் காணுவதற்கு பிரான்ஸில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இவற்றின் பின் புலத்தில் நுண்மதித் தேர்வினை அமைக்கும் முயற்சியில் அல்பிரட் பீனே (1857 - 1911) ஈடுபட்டார். நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்தும் படிப் படிப்படியாக சிக்கலடையக் கூடியதுமான நுண் மதித் தேர்வினை தியோடோர் சிமோனுடன் இணைந்து அவர் உருவாக்கினார். இந்தத் தேர்வு களினூடாக "காலவயது" "உளவயது" என்பவற்றை விளக்குவதற்கு அவர்களது ஆய்வு கள் அடித்தளமிட்டன.

உளவளர்ச்சி குறைந்த சிறுவர்களை ஆராய முற்பட்ட மாரியா மொன்ரிசோறி (1870-1952) அம்மையாரால் பாலர் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்க முடிந்தது. மூன்று வயது தொடக்கம் ஆறு வயது வரையிலான ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வியை வழங்கும் பொருட்டு அவர் ரோம் நகரச் சேரிகளிலே பாலர் கல்வி நிலையங்கள் பலவற்றைத் திறந் தார். புலக்காட்சித் திறன்களை வளர்ப்பதன் வாயிலாகவும், உடலியக்கத்திறன்கள், புலனியக் கத்திறன்கள் முதலியவற்றை வளர்ப்பதன் வாயி லாகவும் அனைத்துச் சிறுவர்களுக்கும் கல்வி ஏற்பாடுகளை அம்மையார் முன்னெடுத்தார்.

மரக்கட்டைகள், விதைகள், நூற்பந்துகள் தடிகள் போன்ற இலகு சாதனங்களைப் பயன் படுத்திச் சிறுவர்க்கான கற்றலையும், கற்பித்த லையும் அவர் ஒழுங்கமைத்தார். சூழலை நன்கு ஒழுங்கமைப்பதன் வாயிலாக சிறுவர்களின் இயல் பான வளர்ச்சியை மேம்படுத்தலாம். குழந்தைக ளுக்குப் பொருத்தமான கற்றல் சாதனங்களை ஒழுங்கமைத்துக் கொடுத்த பின்னர் அவர்கள் தாமாகவே செயற்படுமாறு செய்ய வேண்டும் என்பது அம்மையாரின் கருத்து. அக்காலத்தில் இத்தாலியில் நிலவிய மனனம் செய்தல், மீட்டெ டுத்தல், இருக்கைகளில் நிலைத்திருத்தல் போன்ற நியமமான கற்பித்தல் முறைகளோடு ஒப்பிடும் பொழுது அம்மையாரின் அணுகுமுறைகள் புரட் சிகரமாக அமைந்தன. பிரச்சினைக்குரிய சிறுவர் களைக் கூடக் கற்றலிலே ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கு அவரது அணுகுமுறைகள் துணை நின்றன.

தமிழகத்தில் பெருங்கவி பாரதியார் எழுதிய பாடல்கள் சிறுவர் கல்வி தொடர்பான புதிய அணுகுமுறைகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தன. விளையாட்டும் கற்றலின் பரிமாண மாக அமைதல் "ஓடி விளையாடு பாப்பா" என்ற அவரது எண்ணக்கருவால் வெளிப்படுகின் றது.

நெகிழ்ச்சியற்ற நியமமான கற்பித்தல் வழங்கப் பெற்ற தமிழகச் சூழலில் "ஓடி விளை யாடு பாப்பா" என்பது மாற்றுவகைப்பட்ட கருத்தாக அமைந்தது.

மாரியா மொன்ரி சோறி அம்மையாரது கருத்துக்கள் ஒரு காலகட்டத்தில் முற்போக்கா னவையாகக் காணப்பட்டாலும், தற்காலத்தில் கூடுதலான திறனாய்வுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. லோறா ஈ பேர்க் இதனைப் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். பல மொன்ரி சோறி பாடசாலைகள் நெகிழ்ச்சி யற்ற நடைமுறைகளைக் கொண்டுள்ளன என்பதை அவர் நிறுவினார். பாலர்களிடையே விரிவான இடைவினைகளும் ஊக்குவிக்கப்படுவ தில்லை. அதிக சட்டதிட்டங்கள் பாலர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். அவரது திறனாய்வுகளைப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் விருப்புடன் வரவேற்கின்றனர்.

கலாநிதி. சபா ஜெயராசா
முதுநிலை விரிவுரையாளர், கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரப் பொருட்கள் - அன்பளிப்புப் பொருட்கள்

நிதான விலையில் பெற்றுக்கொள்ள

சிவகாந்தா

விற்பனை நிலையம்

இல: 65, 66, சிறப்பு அங்காடி

யாழ்ப்பாணம்.

மங்கள வைபவங்களுக்கேற்ற

கூறைச் சேலைகள்

பட்டுவேட்டி - சால்வைகள்

இறக்குமதி செய்யப்பட்ட லோங்ஸ், சேட்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

கிருஷிகா ஆடை அகம்

69 A, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்குழந்தை இல்லம் - அரசடி

வெள்ளி விழா மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ விக்னேஸ்வரா
களஞ்சியம்

148, கண்டி வீதி, சாவகச்சேரி,

கிளை:

றூபா பன்முக வர்த்தகம்

104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலுதவிச் சிந்தனைகள்

திரு. இ. தவகோபால்

முதலுதவி என்பது

இன்றைய உலகில் விபத்துக்கள் முற்றாகத் தடுக்க முடியாதவை. எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்துக்களை ஓரளவுக்குத் தவிர்க்கலாம். அல்லது ஆபத்தின் தீவிரத்தைக் குறைக்கலாம். விபத்து நிகழும் இடங்களில் வைத்தியர்களின் சேவை உடனடியாகக் கிடைக்க முடியாது. விபத்துக்குள்ளானவர்களை வைத்தியர் வரும் வரை அல்லது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வரை அளிக்கப்படும் உடனுதவியும் பராமரிப்புமே முதலுதவி எனப்படும்.

முதலுதவியின் நோக்கம்

1. துன்பப்படுபவருக்கு நல்ல சமாரியன் போல உதவுவது மனிதப் பண்பும் காருண்ணியமும் மிக்க செயலாகும்.
2. விபத்துக்குள்ளானவரின் நிலை மேலும் மோசமடையாது தவிர்த்தல்.
3. விபத்துக்குள்ளானவரின் அவஸ்தையைக் குறைத்தல்.
4. முதலுதவி முறை மூலம் குணமாக்கலுக்கு உதவுதல்.

முதலுதவியாளர் முதலில் கவனிக்க வேண்டியவை

1. விபத்துக்குள்ளானவரின் அறிகுறிகளை அவரிடமிருந்தும் அவரின் நிலையை அவதானித்தும் அறியலாம்.
2. மூச்சு (சுவாசம்) இல்லாதிருந்தால் உடனே உயிர் நீங்கி விட்டதெனக் கருதக்கூடாது
3. விபத்துக்கான காரணியை அகற்றுதல் வேண்டும். அல்லது தாக்கப்பட்டவரைக் காரணியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.
4. காயங்கள் முதலியன எதுவாயினும் குருதிப்பெருக்கை உடன் நிறுத்த வேண்டும்.

முதலுதவி முறைகள்

(1) ஓர் காயத்திற்கு மருந்திடல்

1. காயத்தை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல் வேண்டும்.
2. அயடீன் அல்லது பிளேவின் இடல் வேண்டும்.
3. பஞ்சை வைத்து பிளாஸ்டரினால் அல்லது துணியினால் கட்டவேண்டும்.

(2) வெட்டுக் காயங்கள்

1. குருதிப் பெருக்கை நிறுத்தவும்.
2. அதிர்ச்சி ஏற்படாமல் தடுக்கவும்
3. காயத்தில் தொற்று ஏற்படாதிருக்கச் செய்யவும் கிருமி கொல்லிகளால் கழுவிய பின் சிக்கற்றின் இட்டு துணியால் கட்ட வேண்டும்.

(3) மூக்கால் இரத்தம் வடிதல்

1. நோயாளியை இருக்க வைத்து தலையைச் சிறிது முற்பக்கம் சரிக்க வேண்டும்.
2. வாயினூடாக சுவாசிக்க கூறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நோயாளி தனது விரல்களினால் மூக்கின் மென்மையான பகுதியை அழுத்த வேண்டும்.

4. நெற்றியில் ஈரத்துணியை அல்லது பனிக்கட்டியை வைத்தல் வேண்டும்.

(4) பாம்புக்கடி

1. கடித்த இடத்திற்கு மேல் கட்டிட வேண்டும்.

2. சவர்க்காரம் போட்டு காயத்தைக் கழுவுதல் வேண்டும்.

3. நடந்து திரிய அனுமதிக்கக் கூடாது.

4. சுவாசம் தடைப்பட்டால் செயற்கைச் சுவாசம் செய்க.

(5) அதிர்ச்சியால் மயக்கம் அடைந்தவர்க்கு

1. கம்பளியால் மூடிப்படுக்க வைக்கவும்.

2 கை கால்களை விரைவாகத் தேய்த்து விடவும்.

3. இரத்தப் பெருக்கு இருப்பின் உடன் நிறுத்தவும்.

4. தலையில் காயமில்லாவிடின் காற்பக்கத்தை ஒரு அடி உயர்த்தி வைக்கவும்

5. நினைவில்லாவிடின் மணக்கும் உப்பை மணக்கக் கொடுத்து நினைவு வரச் செய்யவும்.

(6) எரிகாயங்கள் (தீப்புண்)

1. தீ எரிகாயங்களுக்கு எரிபட்ட பகுதி மேலுள்ள உடைகளை நீக்கவும் ஒட்டியிருக்கும் துணியை அகற்றக் கூடாது.

2. எரிபட்ட இடங்களைத் தீண்டக் கூடாது.

3. கறியுப்பை வெந்நீரில் இட்டு அதிற் தோய்த்த சுத்தமான துணியாற் காயங்களை மூடவும்.

(7) சூரிய வரதையில் மயங்கி விழுவோருக்கு

1. குளிரான காற்றோட்டமான இடத்தில் படுக்க வைக்கவும்.

2. உடைகளை நெகிழ்த்தி விடவும்.

3. ஐஸ்கட்டி அல்லது குளிர்நீர் தோய்த்த துணியால் நோயாளியின் நெற்றி கண்ணிமை ஆகிய பகுதிகளில் வருடவும்.

4. சுய நினைவிருப்பின் குளிரான பானங்கள் கொடுக்கலாம்.

(8) குருதிப் பெருக்கைத் தடுப்பதற்கு

1. காயத்தின் மேல் சுத்தமான துணியால் அமுக்கத்தை உண்டாக்குதல்.

2. முடியுமானால் இரத்தக் குழாயிகளின் பாதையில் இறுக்கமாகக் கட்டியும் குருதிப் பெருக்கை தடுக்கலாம்.

3. எலும்பு முறிவுகள் இல்லாத விடத்து காயமுள்ள பகுதியை உயர்த்தி வைக்கவும்.

4. சுத்தமான காற்றோட்டமுள்ள இடத்தில் நோயாளியை வைக்கவும்.

(9) மின் அதிர்ச்சி

1. மூன்று நிமிடங்களினுள் நோயாளியை மின் தொடர்பிலிருந்து அகற்ற வேண்டும்.

2. முதலில் மின் பொறியை அல்லது தலைமை ஆளியை நிறுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உலர்ந்த மரம் அல்லது பலகையிலிருந்து உலர்ந்தறபர் செருப்பில் நின்று நோயாளியைத் தொட்டு அகற்றவும்

4. நோயாளிக்கு செயற்கை சுவாசம் அளிக்க வேண்டும்.

(10) நீரில் மூழ்குதல்

1. சுவாசப்பாதை அடைபட்டிப்பிருன் அடைப்பை வெளியேற்ற வேண்டும்.

2. செயற்கை சுவர்சம் கொடுக்க வேண்டும்.

(11) என்பு முறிவுகளுக்கு

1. குருதிப் பெருக்கு இருப்பின் நிறுத்தல் வேண்டும்.

2. காயமிருப்பின் மூடிக்கட்டுக.

3. சிக்கலான முறிவாயின் சீர்படுத்த வேண்டும்.

4. முறிந்த பகுதிகளுக்கு மட்டை வைத்துக்கட்டவும்.

5. கை, காறை என்புகளுக்கு தவளமிட்டுச் சொகுசாக வைக்கவும், கால் முறிவுகளாயின்படுக்கையில்வைக்கவும்.

(12) நாய் கடித்தல்

1. கடித்த இடத்தை சவர்க்காரம் போட்டு நன்றாகக் கழுவ வேண்டும்.

2. சுத்தமான துணியால் கட்டி வைத்திய சாலைக்கு அனுப்ப வேண்டும்.

3. கடித்த நாயை பத்து நாட்களுக்கு கட்டி வைத்திருக்கவும் அதற்குள் இறந்து விட்டால் அல்லது விசரின் அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியரிடம் அறிவிக்கவும்.

இ. தவகோபால்
முதல் உதவி போதனாசிரியர்
பரியோவான் முதல் உதவி,
செஞ்சிலுவைச்சங்கம், முறைசாரக் கல்விப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் கல்விக் கழகம் வழங்கும்
வெள்ளி விழா வாழ்த்து

கழகப் பத்திராதிபர்
சைவப்புலவர்: இரா. ஸ்ரீதரன்

ஞானமாம் கல்வி தன்னை நங்களது சிறார்களுக்கு
ஞாலமே புகழும் வண்ணம் நவின்றிடும் நல்ல இல்லம்!
மானமாய் மக்களெல்லாம் மனமுடன் வாழ்த்தும் இல்லம்!
கோலமாய்த் திகழும் அரசடி ஞானக் குழந்தை இல்லம்!
கானமாய் ஒலிக்கும் நல்ல பாலர்கள் மழலைச் சொல்லே
காதினில் கேட்கும் நல்ல கானாமிர்தமாமே!
பானமாய்ப் பருக நல்ல பாலர்தம் இனிய கானம்
பரப்பிடும் நல்ல ஞானக் குழந்தை இல்லமிதாமே!

பொருந்திய சேவை செய்து புத்தொளி வீசி நின்று நல்ல
திருந்திய சிறார்களைச் சீரிய கல்வியை ஊட்டி என்றும்
வருந்திய பிள்ளையை வாய் சிரிக்கவே செய்து நிற்கும்
அருந்ததி வளர்க்கும் நல்ல அரசடி ஞானக் குழந்தை இல்லம்.

சின்னஞ் சிறு பாலர்களைச் சிறப்புடன் உருவாக்கித் தந்து
பென்னம் பெரிய சேவை செய்யும் அரசடி ஞானக்குழந்தை இல்லம்
இன்னமும் வளர்த்து நல்ல பணிகள் பல இயற்றியே நாளும்
வன்னமாய் வாழி என்று வாழ்த்தியே போற்றுகின்றோம்

நவமணி போலும் நல்ல அரும்பணி ஆற்றி என்றும்
கவலையை மாற்றி நல்ல களிப்பினை அளித்திடும் இந்த
உவமையே இல்லா அரசடி ஞானக்குழந்தையை வளர்த்திடும்
சிவமனோகரியாம் அந்தச் செல்வியை வாழ்த்துகின்றோம்

அரிய பல சேவையாற்றும் அரசடி ஞானக்குழந்தை இல்லம்
உரிய நற்பருவ மெய்தி உயர்ந்து நிற்கும் இந்நாளில்
பெரிய மனதுடனே சீர்பெற்று வாழ்ந்து சிறக்க என்றே
கரிய முகக் கணபதி தன் கை கூப்பி வணங்கிடுவோம்.

துள்ளி விளையாடும் நல்ல தூய உள்ளம் மிகு பாலர்களை
தூக்கியே விடுகின்ற தூயபணி பலவும் செய்து
அள்ளி அணைத்துக் கொள்ளும் இந்த அரசடிப் பாடசாலை
ஆரம்ப முன் கல்வியை அள்ளி வழங்கிடும் ஞானப்
பள்ளிநீ வாழ்க பல்லாண்டு காலம் வாழ்கவே
பாரினில் பேர் விளங்கச் சேவைகள் பலவுமாற்றி
வெள்ளி விழாக் காணும் நீ வேகமாய் வளர்ந்து இன்னும்
வேண்டிய பணியே செய்து மேதினியில் நீடுவாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MURUGAN STORES

27, STANLEY ROAD, JAFFNA.

★
★
★

DISTRIBUTORS FOR:

CEYLON TOBACCO CO LTD

BRANCH SHOP:

- MULLAITIVU
- KILINOCHCHI
- CHAVAKACHCHERI

★ வடமாகாண சிகரெட் விற்பனையாளர் ★

HEAD OFFICE:

NORTH CITY TRADES

Transport Agents & Commission Agents

NO. 58, OLD MOOR STREET

COLOMBO - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி ஞானக்குழந்தை இல்லம்
வெள்ளி விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

கோல்டன் செரமிக்
GOLDEN CERAMIC

WHOLE RETAIL DEALERS IN

ALL CERAMIC WARES and **S-LON PIPES**

FITTINGS

இல. 2-D, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலரைப் பயிற்றும் ஆசிரியரது இலட்சணங்கள்

செல்வி. கணநாதன் மைதிலி B.A. (Hons)

பிள்ளையொன்றின் முதல் ஐந்து வயது வரையுள்ள வளர்ச்சி நிலை 'பாலப்பருவம்' என வரையறுக்கப்படுகின்றது. குழந்தை பிறக்கும் போது அதன் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி ஆகியனவற்றில் தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இத்துறைசார்ந்த இன்றைய ஆய்வு முடிவுகளின்படி விவேகத்தில் 45% மட்டுமே பரம்பரைக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது. அவர்களது பரம்பரையோடு தொடர்பற்ற சூழல் சார்ந்த காரணிகள் விவேக மட்டத்தை நிர்ணயிப்பதில் முக்கிய பங்களிப்பைச் செய்வதாகக் கருதுகின்றனர். உதாரணமாகப் 17 வயதில் அளக்கப்படும். மாணவர்களின் விவேகத்தில் 20% ஒரு வயதிலேயே விருத்தி பெறுவதாகக் கூறப்படுகின்றது.

பாலப்பருவத்திலே வீட்டுச் சூழலை விட்டு முதன் முதலில் வெளியே செல்லும்; பெருமளவு நேரத்தைச் செலவிடும் சூழல் பாடசாலைச் சூழலாகும். எனவே வளர்ந்து வரும் பாலரொருவரின் முழுமையான வளர்ச்சியில் பாலர் பாடசாலைச் சூழல் மிக முக்கிய நிலையமாக விளங்கும். பாலர் பாடசாலை என்பது பாலரின் விவேக வளர்ச்சியைத் தீர்மானிக்கும் பிரதான களமாக அமைகிறதெனலாம்.

பிள்ளைகளின் கல்வி, மற்றும் ஏனைய விருத்திகளில் பாலர்கல்வி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டு உணரப்படுகின்ற போதும்; செயற்பாட்டளவில் பாலர் கல்வியின் முக்கியத்துவம் பின் தங்கி உள்ளது. ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி; தொடர்பாக அரசாங்கம் விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளது ஆயினும், பாலர்கல்வியில் அரசாங்கம் ஒருவகையான தலையிடாக் கொள்கையையே கடைப்பிடிக்கின்றது. இடைநிலை, உயர்தர மாணவர்களுக்கான நல்லாசிரியார்கள் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறார்கள் ஆனால் இந்தளவு முக்கியத்துவம் பாலர் கல்வியிலோ பாலர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை உருவாக்குவதிலோ காணப்படவில்லை, கல்வி என்பது வாசித்தல், எழுதுதல், கணிதப்பயிற்சி என்ற மூன்றில் அடங்கும் என்று கருதிவந்த கொள்கை இப்போது மாறியுள்ளது. பாலரைப் பயிற்றும் ஆசிரியர்களும் திட்டமிட்டு உருவாக்கப்பட வேண்டியவராகின்றனர்.

பாலர் கல்வி தொடர்பான அக்கறையின்மையென்பது பாரம்பரியமாகவே இருந்து வருகின்றது. குருகுலக் கல்வி மரபிலும் கூட சீடன் ஒருவன் குருவுடன் உடனுண்டு, உடனுறைந்து கல்வி பயிலச் செல்லும் காலம் ஐந்து வயதாகவே கூறப்படுகின்றது. குறித்த அந்த ஐந்து வயதிற்கு முன்னர் அவனுக்கான கல்வியில் அக்கறை செலுத்தப்பட்டமைக்குச் சான்றுகள் இல்லையென்றே கூறலாம். மேனாட்டு மரபிலே பாலன் ஒருவன் தனது பாலப்பருவத்திலே பெறும் அறிவையும், ஆளுமையையும், ஏனைய தொழில் நுட்ப அறிவையும் நாம் கண்டு வியக்கின்றோமே தவிர அங்கு அப்பாலர் விடயத்தில் காட்டும் சிரத்தையை நாமும் மேற்கொள்ள முனைவதில்லை. பொருளாதாரக் காரணம் ஒருபுறமிருக்க இத்துறைசார் ஆர்வம் மிகக் குறைவென்று கூறலாம். பாலரைக் கற்பித்தல் தொடர்பான பயிற்சி நெறிகளோ, அல்லது ஆசிரியர்களோ இங்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படுவதில்லை. போஷாக்குள்ள மனித மூலவளத்தை உருவாக்குவதில் நமது மரபில் அடிப்படையிலேயே சடாட்டம் உண்டு.

பாலரைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பாலர் சமூகத்தில் இன்றியமையாத ஓர் அம்சத்துடன் தொடர்புள்ளவர்கள் என்ற வகையிலே இவர்களுக்கான கடமைகள் தலையாயன.

பாலரைப் பயிற்றும் ஆசிரியர் ஒருவர் போதனா சாஸ்திரங்களை அறிதலிலும்

பார்க்க பாலரின் இயல்பை பாலரின் உளவியலை அறிவது மிக அவசியம். பாலர்கள் சுயாதீனமானவர்கள். இத்தகைய இயல்பறிந்து பாலர் சுயாதீனமாகத் தத்தம் கருமத்தைப் பார்க்கத் தக்க வசதிகளைப் பாலர் பாடசாலைகளில் ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும். பாலரின் பாங்கறிதல் என்பது ''இங்கு பாலரைப்பயிற்றும் ஆசிரியரது முக்கிய இலட்சணமாகும்.

பாலர் அடைய வேண்டிய பயிற்சியை இயன்றவரை அவர்களது வாழ்க்கையோடு தொடர்பு படுத்திக் கற்பித்தல், உடல் நலனும் உளவளர்ச்சியும் ஒழுக்கப்பற்றும் ஏக காலத்தில் விருத்தியடையக் கற்பித்தல்; மனதிலே ஆர்வம் தோன்றுமாறு கற்பித்தல்; பாலர்கள் எதிர்காலச் சிற்பிகள் ஆதலால் சமுதாய வாழ்க்கைக்கு வழி நடத்தக் கூடிய பயிற்சிகளைக் கையாண்டு நற்பழக்க வழக்கங்களை உறுதிப்பாடு செய்தல்; பாலர் அனுபவத்தின் வழியாகத் தமக்கு வேண்டிய வல்லபங்களையும் பழக்க வழக்கங்களையும் அடைதற்கேற்ற சந்தர்ப்பங்களை உண்டாக்கல்; சந்தர்ப்பங்களை ஆக்கலோடு நில்லாது தொழிற்படும் திறனையும் அடையச் செய்வதும் பாலரை வழி நடத்தும் ஆசிரியரது கடமையாகும்' எனவே எதையும் செய்வதன் வாயிலாகக் கற்றலும், கற்றவாறு செய்தலும் ஆரம்பக் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியரது குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

காலங்காலமாக இருந்துவந்த கல்வியியற் துறைசார் அறிஞர்கள் ஆசிரியத்துவத்தினாலேயே கற்றல் - கற்பித்தற் செயற்பாடு பூரணமடைய முடியலாம். என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தமை தெரிகிறது. ஜீன் ஜாக்ஸ் ரூசோ (1712—1778) அவர்கள் ஆசிரியத்துவம் பற்றிப் பின்வரும் பொதுவான இலட்சணங்களை எதிர்பார்த்திருந்தமை தெரிகிறது. '' ஆசிரியர்கள் போதனையிலும் சாதனையிலும் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவதுடன் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த அறிஞர்களாக விளங்க வேண்டும். ஆசிரியர்கள் ஞான முள்ளவர்களாகவும், சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றலுள்ளவர்களாகவும், மனிதரின் கடமைகளை நன்கு உணர்ந்தவர்களாகவும், குழந்தைகள் செய்யும் தவறுகளினால் ஏற்படும் தாக்கங்களைத் தாமே பொறுப்பேற்கும் தன்மை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். ' ஆசிரியம் ' என்பதற்கு அணிகலனாக விளங்கும் ஆசிரியர்கள் மன்னுயிர்க்கு வரும் துன்பங்களைத் தம் உயிர்த் துன்பங்களாகத் தாங்கும் தன்மையுடையவர்களாக, கருணையுள்ளம் கொண்டவர்களாக விளங்க வேண்டும். துன்பத்தைத் துடைத்தெறியும் தூய உள்ளத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும். அதிகார அடக்கு முறையால் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தாமல் அன்பினால் அரவணைத்து ஆட்கொள்ள வேண்டும்'' எனப் பலவாறு குறிப்பிடப்படுகின்றது,

பாலர்களின் புலன் உணர்ச்சிகளைப் பயிற்சி மூலம் விருத்தியாக்குவதில் பெருநம்பிக்கை கொண்டவர்; உள மருத்துவராகவும் பாலர் கழகக் கல்விமுறையின் புதியதோர் கிளர்ச்சியை உண்டு பண்ணியவருமான மொன்டிசோறி அம்மையார் (1870—1952) அவர்கள். இவர் பாலர் கல்வியின் கற்பித்தற் செயற்பாட்டிற் பின்வரும் விடயங்களை முனைப்புறுத்தியிருக்கிறார்.

(1) சுதந்திரமாகக் குழந்தைகள் தாம் விரும்பியவாறு கற்க வேண்டும். எவருடைய குறுக்கீடும் இருக்கக் கூடாது. குழந்தையின் தனித்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

(2) தமது சுய முயற்சியின் மூலமே குழந்தைகள் கற்க வேண்டும் அதற்குரிய துணைக் கருவிகளைப் பாடசாலைகள் வழங்க வேண்டும்.

(3) அறிவுக்கு வழிவகுக்கும் வாசல்களான புலன்களுக்கும், தசைகளுக்கும் நன்கு பயிற்சியளிக்க வேண்டும்.

(4) சமூக உணர்ச்சிகளைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்தக் கூடிய இயற்கையான குழுக்களாக அவர்களைப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

(5) ஆசிரியரின் பணி கற்பிப்பதல்ல, இயக்குநராக இருந்து பிள்ளைகட்கு வழிகாட்டலும் ஊக்கமளித்தலுமே அவரின் பணியாம்.

இவையெல்லாம் காலங்காலமாகமேனாட்டு மரபிலே பாலரைப் பயிற்றுதல் தொடர்பாகப் பேணப்பட்டு வந்த கருத்து நிலைகளாகும்- பாலருக்குகந்த இத்தகைய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய ஆளுமையுடையவர்களாகப் பாலரைப் பயிற்றும் ஆசிரியர்கள் விளங்க வேண்டும் இவ் ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நன்கு உணர்ந்து அதற்கு மதிப்பளிப்பவர்களாகவும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்:

தொகுப்பாக நோக்குகின்ற போது மனிதனது கல்விப் பருவங்களில் பாலர் கல்விப்பருவம் என்பது தலையாயதும் மிக முக்கியமானதுமாக அமைகிறது என்பது இன்று பெரிதும் உணரப் படுகின்றது. இவ்வாறு உணரப்பட்டாலும் பாலர் கல்வி முறைமைக்குச் சரியான நெறிப்படுத்தலோ அல்லது திட்டங்களோ நமது மரபில் இல்லை: முக்கியமாகப் பாலர் கல்வியில் முக்கியத்துவம் வாய்ந்த தலையாய பொறுப்புடைய ஆசிரியர் பற்றிப் பெரும் சிரத்தை காட்டப்படவில்லை. கல்வியியலில் ஏனைய துறைகளுக்குக் காட்டப்படும் முக்கியத்துவம் இத்துறைக்குக் காட்டப்படாமையினாற் பல பாரதூரமான சமூக விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே பாலரைப் ப்யிற்றலின் யதார்த்த நிலை உணரப்பட்டு மேற் கூறப்பட்டது போன்ற பாலர் ஆசிரியர் இலட்சணங்களையுடைய பாலராசிரிய சமூகம் உருவாக்கப்படுதல் மிக மிக அவசியம், சமூக மாற்றத்தில் இத்துறையினரின் தாக்கம் மிகக் காத்திரம் வாய்ந்தாகும்.

உசாத்துணை நூல்கள்

1. மயில்வாகனம் A. V. :
பாலரைப் பயிற்றல்

2. ஜோண்பிள்ளை V. A. (1938) :
பாலர் கழகக் கல்வி முறை

3. நல்லாசிரியரின் கடமைகள் :
மணிமேகலைப் பிரசுர ஆசிரியர்குழு

4. முத்துலிங்கம் ச. (1974) :
கல்வியியல் ஓர் அறிமுகம்

5. பெரேரே எஸ். எச் (1932) :
கல்வி பயிற்றலின் அத்திவாரம்

6. சந்திரசேகரன் சோ. (1991) :
கல்வியற் கட்டுரைகள்

7. சந்திரசேகரம் ப. (1987) :
கல்வியியற் கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்குழந்தை இல்லம் அரசடி வீதி - பாலர் பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

இ. இரத்தினகோபால்
செயலாளர், பாலர் கல்விக் கழகம்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் யாழ் நகரில் சைவப்பாலர்களுக்கான சிறந்த பாலர் பாடசாலை இல்லாமல், பிறமதப் பாலர் பாடசாலைகளில், சைவச் சிறார்கள் கல்வி பயின்றதைக் கண்டு அப்போது இருந்த யாழ் இளைஞர் கழகக் காப்பாளர்களாக விருந்த சட்டத்தரணி திரு. சி. நாகராசா, சட்டத்தரணி திரு. இ. விஸ்வநாதன், வைத்திய கலாநிதி வே. யோகநாதன், வைத்திய கலாநிதி வீ. கே. சண்முகநாதன் ஆகியோரின் ஆலோசனையின் பெயரில், "யாழ் இளைஞர் கழகம்" யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் போன்ற இடங்களில் பாலர் பாடசாலைகளை ஆரம்பித்தது. இதில் ஒன்று தான் அரசடி வீதி, ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலை ஆகும். இப் பாலர் பாடசாலை 1970ம் ஆண்டு தைப்பூச தினத்தன்று (22-01-1970) அப்போதைய காப்பாளரான வைத்திய கலாநிதி வே. யோகநாதன் அவர்கள் இல. 84, அரசடி வீதியில், மங்கள விளக்கேற்றி பாலர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

நேர்முகப் பரீட்சை மூலம் பாலர் கல்வியில் டிப்புளோமா பயிற்சியும் அனுபோகமிக்க செல்வி. தங்கேஸ்வரி பொன்னுத்துரை அவர்கள் ஆசிரியையாக நியமிக்கப்பட்டார்கள். இவர் பாலர் கல்வியில் காட்டிய ஊக்கமும் ஆக்கமும் பாலர் பாடசாலை நாளொரு மேனியும் பொழுதோரு வண்ணமாக அனைவரின் ஒத்துழைப் பால் ஆல் போல் தளைத்து வந்தது. 1973ம் ஆண்டு இப் பாலர் பாடசாலையில் நாற்பத்தைந்து பிள்ளைகளுக்கு மேல் கல்வி பயின்று வந்தார்கள். இவருக்கு உதவியாக செல்வி: சந்திரவதனா தம்பிராசா (பயிற்சி பெற்ற ஆசிரியை) நியமிக்கப்பட்டார்கள். இவ்விரு ஆசிரியைகளும் கிறமாக ஆங்கிலம் தமிழ் மொழிகளில் பாலர்களைப் பயிற்றுவித்து, உடற்பயிற்சி, கைப்பணி, கலைநிகழ்ச்சி, போன்றவற்றில் பாலர்களை ஈடுபாடு கொள்ளச் செய்து உடல் உள வளர்ச்சியில் மேம்படச் செய்தார்கள், செல்வி. தங்கேஸ்வரி பொன்னுத்துரை ஆசிரியை அவர்கள் கண்ணும் கருத்துமாக தனது சேவையை பொதுச் சேவையாக நடத்தி, சகல பெற்றோர்களினதும் பாராட்டைப் பெற்று 1980ம் ஆண்டு ஆசிரியை பதவியிலிருந்து விலகி திருமணம் செய்து இன்று கனடாவிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

1980ம் ஆண்டு அரசியல் சூழ்நிலை காரணமாக யாழ் இளைஞர் கழகம் "பாலர் கல்விக் கழகம்" என்னும் பெயருடன் இயங்கத் தொடங்கியது. கலாநிதி முகாந்திரம் E. P., இராசையா J. P., கலாநிதி. க. கனகராசா J. P, திரு. த. சண்முகலிங்கம் J. P. ஆகிய மூவரும் காப்பாளர்களாகப் பொறுப்பேற்றுப் பாலர் பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றி வருகிறார்கள். இவர்களுள் கலா முகாந்திரம் E. P., இராசையா J. P. அவர்கள் 1990 இல் காலமாகவே இவருக்குப் பின்னர் திரு இ சிவானந்தன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) பணியாற்றினர் இவர் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தும் இன்னும் பல வழிகளில் கழகம் சிறப்புறச் செயற்படுவதற்கு ஆலோசனை வழங்கியும் கழகத்தையும் ஆசிரியர்களையும் நெறிப்படுத்தினார். துரதிஸ்டவசமாக 06-03-1995 இல் எமது காப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்கள் சிவபதமடைந்து விட்டார். வெள்ளி விழாக் கொண்டாடும் இன்றைய நிலையிலே அன்னாரின் இழப்பைப் பெரிதும் உணர்ந்து துன்புறுகிறோம்.

இப் பாலர் பாடசாலை வரலாற்றில் சிறப்பாகக் கடமையாற்றிய இன்னொருவர் செல்வி. மாரிமுத்து செல்வராணி அவர்கள் இவர் பத்து ஆண்டுகள் திறமையாகவும் சிறப்பாகவும் கடமையாற்றிப் பெற்றோரதும், பலரதும் அபிமானத்தைப் பெற்றவர்.

பாலர் கல்விக் கழகத்தினால் வருடம் தோறும் கழகப் பாலர் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு விழாவில் அரசடி வீதி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலை 10 ஆண்டுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தது குறிப்பிடத் தக்கது. இதைபோன்று கலை நிகழ்ச்சியிலும் மற்றைய நிகழ்ச்சியிலும் முன்னணியில் திகழ்ந்தது. இவருடைய காலத்தில் பிள்ளைகளின் தொகை 80ஆக உயர்ந்தது இவருக்கு உதவியாக இரு உதவி ஆசிரியைகள் கடமை புரிந்தார்கள்.

1990ம் ஆண்டு துக்கத்திலும், சந்தோஷம் என்பதற்கிணங்க இப்பாடசாலை சகடையின் குண்டு வீச்சுக்கு பாடசாலை இல்லாத நாளில் இலக்காகி தளபாடம் உட்பட உபகரணங்களையும் இடத்தையும் இழந்தது. பாடசாலை இல்லாத நாளில் நடைபெற்றதால் உயிர்ச் சேதம் இல்லாமல் காப்பாற்றியது இறைவன் செயல்.

இதனைத் தொடர்ந்து இப் பாடசாலை இல. 76, அரசடி வீதியில் அமைந்துள்ள செல்வி வற்சலா நாகலிங்கம் அவர்கள் பாலர் பாடசாலை நடத்துவதற்கு இடத்தை தந்துதவினார்கள். இப்பாடசாலையில் செல்வி செல்வராணி மாரிமுத்து அவர்கள் 1991 முற்பகுதி மட்டும் பாடசாலையைத் திறம்படநடத்தி தனது வாழ்கையின் முன்னேற்றத்தைக் கருதி பிரான்ஸ் சென்று சிறப்பாக வாழ்வதும் குறிப்பிடத்தக்கது. இவரைத் தொடர்ந்து செல்வி. ராகினி நடராசா அவர்கள் சிறிது காலம் முதன்மை ஆசிரியையாக கடமைபுரிந்து பின் யாழ் மாநகர சபையின் நூலகராகப் பணிபுரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து செல்வி. ஸ்ரீ ரஞ்சினி இரத்தினசிங்கம் சில மாதங்கள் முதன்மை ஆசிரியையாகக் கடமையாற்றி கனடா சென்று, திருமணம் செய்து சீரும் சிறப்புடன் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

இவரைத் அடுத்து செல்வி. நிர்மலாதேவி சதாசிவம் அவர்கள் பல மாதங்கள் முதன்மை ஆசிரியையாகக் கடமையாற்றி திருமணம் செய்வதற்காக விலகிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. இவருடன் உதவி ஆசிரியையாக கடமையாற்றிய செல்வி. அருந்ததிதேவி குலநாயகம் கழகத்தால் முதலாசிரியையாக நியமிக்கப்பட்டார்கள். இலைமறை போலிருந்த இவருடைய பாலர் கல்வி சம்பந்தமான குணாதியங்களும் ஆர்வமும் வெளிக் கொண்டு வரப்பட்டு மீண்டும் புத்தொளி பெற்று சிறப்பாக விளங்கத் தொடங்கியது. இவ்வாசிரியைக்கு உதவியாசிரியைகளாக மூவர் நியமிக்கப்பட்டார்கள். சென்ற ஆண்டு (1994) இப் பாலர் பாடசாலை மாணவரின் எண்ணிக்கை 100க்கு மேல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு இப்பாடசாலையில் பேச்சுத்திறன் காணும் வைபவம், விளையாட்டு விழா, சரஸ்வதி பூசை, கலை விழா, பாலர் கண்காட்சி போன்றவற்றை பாடசாலை மட்டத்தில் நடத்தியும், கழகத்தால் நடத்தப்பட்ட திறமை காண் நிகழ்ச்சியில் பங்கு பற்றியும் சிறப்பாக நடந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் செல்வி. வற்சலா நாகலிங்கம் அவர்கள் தனக்கு இடம் தேவை என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க 20-01-95ல் இப்பாடசாலை செல்வி. கு. அருந்ததிதேவி ஆசிரியையும், சக ஆசிரியைகளும் பெற்றோர் ஆசிரியை சங்கச் செயலாளர் திரு. சி. முருகையா அவர்களின் விடாமுயற்சி காரணமாக இப் புதிய வீடு பாடசாலைக்காக எடுக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய வசதிகளுடன் இப் பாடசாலையில் 1970ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஆசிரியையாக கடமையாற்றி வந்தவர்களும், வருபவர்கள் பெயரும் குறிப்பிடப் பெற்றது. இவ் வெள்ளி விழா மலரை திறம்பட வெளியிட வேண்டுமென்று ஆர்வம் கொண்டுள்ள ஆசிரியைகளான செல்வி கு. அருந்ததிதேவி, செல்வி இரா. சிவமனோகரி, செல்வி ச. சசிதேவி செல்வி கு. ஜெயகௌரி ஆகியோர் உட்பட

பாலர் கல்விக் கழகம்,
49/5, யாழ் றோட்,
யாழ்ப்பாணம்.

இப் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியை சங்க உறுப்பினர்களுக்கும் கழகச் செயலாளர் என்ற முறையில் எமது பாராட்டுக்களைக் கழகத்தின் சார்பில் தெரிவிக்கின்றேன்.

" தரணியில் ஞானக்குழந்தை இல்லத்தின் சேவை சிறப்புடன் விளங்க இறைவன் அருள்புரிவாராக "

இ. இரத்தினகோபால்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்குழந்தை இல்லம் - அரசடி

நிர்வாக சபை உறுப்பினர்கள் - 1995

இருப்பவர்கள் இடமிருந்து:- திரு. சி. முருகையா (உபதலைவர்), திருமதி. ர. அகிலன், திரு. ல. நிமலேஸ்வரன், செல்வி. சிவமனோகரி (பொருளாளர்), திருமதி. தெ. இரத்தினகோபால் (பாடசாலை மேற்பார்வையாளர்), செல்வி. கு. அருந்ததிதேவி (தலைவர்), திருமதி. கோ. சுப்பிரமணியம், திருமதி. தி. முத்துலிங்கதாஸ் திரு. சு. இரத்தினசிங்கம் (செயலாளர்).

நிற்பவர்கள் இடமிருந்து:- திரு. த. தருமராசா, திரு. க. மனோகரன், திரு. கா. விவேகானந்தன், திரு. த ஞானதேசிகன் (உபசெயலாளர்), திரு. இ. விவேகானந்தா, திரு. க. யோகேந்திரா, திரு. லி. அன்ரன், திரு. கு. சிவானந்தன் திரு. சி. ஞானசுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

திருமணம் மற்றும் முகூர்த்தப்

பட்டுப் புடைவைகள்

சேட்டிங் - சூட்டிங்

என்பவற்றை

உங்கள் எண்ணம் போல்

எண்ணற்ற ரகங்களில் தெரிவு செய்திட

இன்றே விஜயம் செய்யுங்கள்

இளவரசி சேலைச் சோலை

இல. 57, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா காணும் அரசடி ஞானக்குழந்தை இல்லம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்

எஸ். எம். பெர்னான்டோ

இல. 580, மருத்துவமனை வீதி, (இலங்கை வங்கி அருகில்) யாழ்ப்பாணம்.

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்த
கண்ணாடிகளைச் சரிவரப் பெற்றுக்கொள்ள

)-(ஒரே ஸ்தாபனம்)-(

V

எஸ்-எம்-பெர்ணன்டோ

()
()
()

Occulist's Prescriptions
Accurately And Promptly
DISPENSED:

S. M. FERNANDO

580, Hospital Road. (Near Bank of Ceylon) JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி ஞானக்குழந்தை இல்லம்
வெள்ளி விழாமலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

அலுமினியம் - எவர்சில்வர் பாத்திரங்கள்

அழகு சாதனப் பொருட்கள் - சிறுவர் சைக்கிள்கள்

நாகரீக விளையாட்டுப் பொருட்கள்

அன்பளிப்பு பொருள்கள்

யாவும் நிதான விலையில் கிடைக்கும்

V

★ கலா அழகுக் களஞ்சியம் ★

இல. 65, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

FASHION HOUSE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா மலர் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்

ஆடவர்
மகளிர்
சிறுவர் -

அனைவருக்கும் ஏற்ற பாதணிகள் அத்தனையும் புதுவிதம்

★ நாடவேண்டிய இடம் ★

V

கபிலா காலணியகம்

இல. 04, சந்தோசம் தெரு, (கஸ்தூரியார் வீதி,) யாழ்ப்பாணம்.

VISIT TO:-

KABILA SHOE PALACE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் கல்வியில்
சுத்தமும் சுகாதாரமும்

டாக்டர். திருமதி. ப. சர்வேஸ்வரன்

பாலர் கல்வியின் மேல்நாட்டு விஞ்ஞான முறைத் தந்தை புறோபெல் எனின், அதன் அன்னை மொன்ரி சோறி அம்மையார். பாலர் பாடசாலைக்குத் தந்தையிட்ட பெயர் குழந்தைகள் தோட்டமாகும் (Kindergarten). அன்னையிட்ட பெயர் (Children's Home) குழந்தைகள் இல்லமாகும். பாலர்களின் கல்வி வளர்ச்சி பயிர்களின் வளர்ச்சியைப் போன்றதாகும்.

இன்றைய சிறுபிள்ளைகள் நாளைய பல் துறைக் கலைஞர்கள் ஆகின்றனர். இவர்களே எதிர்கால சந்ததிகள், நாட்டைக் கட்டி எழுப்பும் உன்னத பணியைச் செய்யப் போகும் எம் தேச நிர்மாணிகள்.

பிறப்பில் இருந்து ஒரு வயது பூர்த்தியாக மட்டும் தமிழில் ''குழந்தை என்றும் ஆங்கிலத்தில் ''in Fant'' என்றும் ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது பூர்த்தியாகும் வரைக்கும் ''பூர்வ பாடசாலைப்பிள்ளை'' என்றும் ஆங்கிலத்தில் ''Pre School Child என்றும் அழைக்கப் படுகின்றனர். குழந்தை தனது பிறப்பு முதல் ஒரு வயது வரை தாயின் கவனத்திலும் அரவணைப்பிலுமே அநேகமாக வளர்ந்து வருகிறது. அதன் பின்பு பொதுவாக இந்தப் பிள்ளை ஐந்து வயது முடிந்த பின்னர் பெற்றோரின் கவனத்துடன் அறிவும் திறனும் மிக்க ஆசிரியர், பாடசாலைச் சுகாதார வைத்தியர் முதலானோரின் கண்காணிப்பில் வளர்ந்து வருகிறது.

ஆனால் இந்த இடைக்கால வயதுள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகள் உருவாகப் பெற்றோரின் கவனத்தினின்றும் விடுபடும் நிலையில் காணக்கூடிய நிலையே அதிகம் காணலாம். ஏனெனில் தாய் மீண்டும் குழந்தை பெறும் நிலையை அடையும் தறுவாயாக காணப்படும் நிலையில்.

எனவே ஒரு குழந்தையின் ஒரு வயது தொடக்கம் 5 வயதுள்ள இந்த பாலர்களின் ''முன்னோடிக் கல்விக் காலத்திட்டத்தில்'' தாய்மாரின் கவனம் குறையும் நிலை ஏற்படுகிறது.

இக் காலத்தில் குழந்தையின் உடல் வளர்சியும் மனோ பக்குவமும் வளர்ச்சியடைந்து வருகிறது. இக்காலப் பகுதியின் பெரும் பங்கை இச்சிறுவர்கள் பாலர் பாடசாலையிலேயே கழிப்பதால் ஆசிரியர்களும் துறைசார்ந்த வல்லுநர், பாடசாலை நிர்வாகிகள் போன்றோர் கல்வி கற்பிப்பதோடு இப்பாலர்களின் உடல் வளர்ச்சியையும் உளப்பாங்கை பேணும் கடமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாலர் பாடசாலை நிர்வாகிகள் போன்றோர் கீழ்காணும் விடயங்களில் குழந்தைகள் மீது அதிகவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகிறது.

1) போஷாக்கு குறைவு 2) புழு வியாதிகள் 3) வீட்டு விபத்துகள் 4) தொற்று வியாதிகள் 5) பழக்க வழக்கங்கள் 6) ஒழுக்கம் என்பனவாகும்.

'' செல்வத்துள் தலை சார்ந்த செல்வம் மகப்பேறு இச் செல்வத்தின் சிறப்பை யுகம் யுகமாக வாழ்ந்து வரும் மனித குலம், வாயார, மனதாரப் புகழ்ந்தும், சொல்லறியா நூல்களைச் சிந்தைக்கு விருந்தோம்பியும் வருகின்றன.

பெறுவதல்ல பெரிது. பெற்றுப் பாக்கியத்தைப் போற்றிக் காத்தல் பெற்றவர்கடமை எனவே குழந்தைகள் இயற்கைக் காரணங்களாலும் செயற்கைக் காரணங்களாலும் நோயிற்று நலிவடையாது நோயின்றி சீருடன் வாழப் பெற்றோர்கள் சுகாதார பழக்கவழக்கங்களை அறிந்து கொள்வதும், அதைப் பேணிக்காப்பதும் மிகவும் அவசியமே.

கூடுதலாக குழந்தைகள் நோயிற்று நலிவடைதலும், இறந்து போவதற்கும் பெற்றோர்களின் அறியாமையும், அலட்சியமுமே காரணங்களாலும் குழந்தைகளை எவ்வாறு போஷிப்பது உடுத்துவது, வளர்ப்பது என்று பலர் அறியாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்பதும், குழந்தைகளுக்கு வரும் வியாதிகளையும் அவர்களின் காரணங்களையும் கூடிய மக்கள் அறியாது இருப்பதுமே காரணமாகும். குழந்தையின் ஆகாரம் – ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பாலே சிறந்த ஆகாரம் - தாய்ப்பால் இல்லா விடில் பசுவின் பாலைக் காச்சி வெந்நீர் கலந்து வேண்டியளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து கொடுக்கலாம். நல்ல பசுப்பால் இல்லாவிடில் பால்மாவை உபயோகிக்கலாம். பால் மாவை உபயோகித்தால் தோடை, திராட்சை முதலிய பழங்களின் ரசத்தைக் கொடுக்கலாம்.

மற்றும் இச்சிறார்களுடைய உணவில் பால், பருப்பு, போஞ்சி, முட்டை, மீன், இறைச்சி என்பன வேண்டியளவு சோறுடன் கொடுப்பதுடன் முக்கியமாக நெத்தலிக்கருவாடு, கொடுத்தல் அவசியம் இதில் உடல் வளர்ச்சிக்கான புரதம் உண்டு; பச்சை நிறக் கீரை வகைகள் மஞ்சள் நிறப் பழங்கள் மற்றும் தோடம்பழச்சாறு எலுமிச்சம் பழச்சாறு நெல்லிக்காய் என்பன அவசியமான உணவு வகைகளாகும்.

எனவே பாலர் கல்வியை புகட்டும் ஆசிரியைகள் இவற்றை நன்கு அறிந்திருப்பதுடன் அச்சிறார்களின் சுத்தம், சுகாதாரம் முதலியவற்றை பேணுதல் அவசியம். எனவே அவர்கள் இத்தகைய அறிவுகளைப் பெற்றுக்கொள்ளுவதும் மிகவும் அவசியம்.

" Healthy mind in a Healthy body " என்று ஓர் ஆங்கில பழமொழி. எனவே முன் பள்ளிக் கல்வித்திட்டத்தில் பயிலும் சிறார்கள் உடல், உள ஆரோக்கியத்துடன் திகழ வேண்டிய அவசியத்தை ஆசிரியர்கள், பெற்றோர்கள் நிர்வாகிகள் அனைவரும் அறிந்திருத்தல் மிக மிக அவசியமானதாகும்.

மற்றும் இச்சிறார்களின் கல்வியுடன் சுத்தம் சுகாதாரம் தேகாரோக்கியம் என்பன திட்டமிடப்பட்டு பேணப்படுதல் மிகவும் அவசியம். இச் சிறார்கள் இப்பருவகாலத்தில் புழு வியாதிகள் (Worms Infection) தாக்கப்படலாம். மேலும் வட்டப்புழு, கீரைப்புழு, நாடாப்புழு என்ற 3 வகையான புழுக்களால் தாக்கம் அடையலாம். எனவே குழந்தைகளுக்கு சுத்தமான உணவுடன் உணவு அருந்தும் முன்பு அவர்களின் கைகளை சவர்க்காரம் போட்டு கழுவி விடுதலும், மலசலம் கழுவிவிடும் இடம் மிகவும் அவதானமாகவும் கவனிக்கப்படல் வேண்டும். எனவே இச் சிறார்களுக்கான பிரத்தியேகமான மலசல கூடங்கள் (Pre - School Latrine) அமைத்தல் அவசியமானது.

எனவே இதற்கான ஆலோசனைகள், கருத்துக்களையும் பெற வைத்தியர் சுகாதார சேவையாளரையும் நாடுதல் அவசியமானது.

மேலும் இப்பாலப் பருவத்திலேயே அதிகம் தொற்று நோய்கள் தோன்றுகின்றன. பாலர்கள் ஒருவருடன் ஒருவர் பழகும் போது நோய் கிருமிகள் தொற்றுகின்றன. சின்னமுத்து, பொக்கிளிப்பான், கூகைக்கட்டு, தொண்டைக்கரப்பான், குக்கல் போன்ற தொற்று நோய்கள் உண்டாகின்றன. மேலும் நெருப்புக்காய்ச்சல், இளம்பிள்ளைவாதம், (Poliylitis) உணவுமூலமும் தண்ணீர் மூலமும், பரவும். இதைவிட தடிமல் காய்ச்சல், சளி, இளம்பிள்ளைவாதம் என்பனவும் தொற்று நோய்களாகும். எனவே இவை பற்றிய அறிவுகளை பாலர் ஆசிரியர்கள் அறிந்திருப்பது மிகவும் அவசியமானது.

குழந்தைகளுக்கு எதிரிகளாக 6 பயங்கர நோய்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கசநோய் முதல் ஏற்புவலி போன்றவை. எனவே இப் பாலர் ஆசிரியைகள் இவை பற்றி கலந்துரையாடல்கள் செய்வதின் மூலம் சகலரும் அறிந்து கொள்ள வசதியாக இருக்கும். மேலும் பாலர்களுக்கு விபத்துக்கள் போன்றவை பாலர்களுக்கு எதிர் பாராத விதமாக இடம்பெறுவதற்கு ஏதுக்கள் உண்டு. உதாரணமாக காயங்கள், தீக்காயங்கள், முறிவுகள், கொதிநீர்ப்புண்கள், சிரங்குகள் என்பன தீய பொருட்களான ஊசி, கத்தரிக்கோல், நஞ்சு மருந்துகள் என்பன போன்றவற்றையெல்லாம் பாடசாலையிலும் சரி, வீட்டிலும் சரி, அவற்றை ஏற்ற இடத்தில் குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத வண்ணம் பாதுகாத்து வைப்பது சகலரினதும் முக்கிய கடமையாகும்.

மேலும் சிறார்களின் பழக்க வழக்கங்கள் ஒழுங்காகப் பேணுதலும் அன்புடன் அரவணைத்தலும் மிகவும் அவசியம். சிறுவயதிலேயே குழந்தைகள் உடல்நலம், உளநலம் பாதிப்படையாது பேணுதல் ஆசிரியர்களின் முக்கிய கடமையாகும். எனவே சில உண்மைகளை ஆசிரியர்கள் உள்ளத்தில் கொண்டு செயற்பட்டால் தான் இந்த தமிழீழ மண்ணில் ஓர் பூரண சுதந்திர ஆரோக்கியமான ஓர் சந்ததியை நாம் கட்டியெழுப்ப முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் தான் தற்போது தமிழீழத்தில் கிட்டத்தட்ட 10 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டு உடல்நலம், உளநலம் தேகாரோக்கியம், கல்வி என்பவற்றுடன் போஷாக்கும் பேணப்பட்டு வருகிறது.

எனவே " சுத்தம் சுகம் தரும் " என்ற வாக்கிற்கிணங்கவும் " நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் " என்ற மொழிக்கிணங்கவும் முன்பள்ளியில் பயிலும் சிறார்களின் சுகாதாரம் தேக ஆரோக்கியம் என்பன கல்வியுடன் பேணப்படுதல் அவசியம். எனவே இச்சிறார்களுக்கு கல்விச் செல்வத்தை அளிக்கும் அந்த முன்பள்ளி ஆசிரிய பெருந்தகைகள் தமது கடமைகளை உணர்ந்து செயற்படுவது இன்றியமையாத செயலாகும்.

எமது தேசத்தை ஆளும் தலைமைத்துவம் கொண்ட இச் சிறார்களை ஓர் சமுதாய சிற்பிகளாக ஆக்கி அளிப்பது முதற்கண் ஆசிரியைகளின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

இதையுணர்ந்து சகல முன்பள்ளி ஆசிரியைகளும் செயற்படுவதுடன் பெற்றோர்கள், மற்றைய நிர்வாகிகள் அனைவரையும் அதன் வழி நடத்தி வெற்றி காண்பதும் அவர்களின் கடமைகளில் முக்கியமானது.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. "

டாக்டர் (திருமதி) பி. சர்வேஸ்வரன்
உப தலைவர்
பாலர் கல்விக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியும்

அரசடி ஞானக்குழந்தை இல்லமும்

சைவப்புலவர். இராசையா ஸ்ரீதரன்
கழகப் பத்திராதிபர்

சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதென்பது மிகவும் கடினமான ஆனால் அதேவேளை மிகவும் சிரமமான ஒரு காரியமாகும் கள்ளங் கபடமற்ற இளம் உள்ளங்களிலே கல்வியைப் போதிப்பது பாலர் ஆசிரியர்களுக்கு ஒரு கைவந்த கலை. வெள்ளை மனம் படைத்த பிள்ளைச் செல்வங்கள் எந்த விடயத்தையும் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் கல்வியானது போதிக்கப்பட வேண்டும். சிறு பராயத்திலே விடயங்கள் பசுமரத்தாணிபோற் பதிந்து விடும். மேலும் குழந்தை மனது நல்லது எது கெட்டது எது என்று பிரித்தறிய முடியாத தன்மையுடையது. அதற்கு இது சரியானது, இது தான் நல்லவழி என்பதை எடுத்துக்காட்டி நல்வழிப்படுத்த வேண்டியது பாலராசிரியர்களின் தலையாய கடமை.

" குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று " என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே குழந்தை மனதைப் புரிந்து கொண்டு அதன் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊன்று கோலாக நின்று துணை செய்ய வேண்டியதே பாலர் முன்பள்ளி ஆசிரியர்களின் பணியாகும்: இளம் உள்ளங்களிலே போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது முதலான தீய எண்ணங்கள் குடிபுகாமற் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி ஏதாவது துளிதானும் துளிர்க்கிறது என்று கண்டால் அதனை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். மேலும் அதுவளர விடாது தீயிட்டுப் பொசுக்கி விட வேண்டும். இதில் ஆசிரியர்கள் மிகுந்த கவனமாகவும் அக்கறையுடனும் இருத்தல் வேண்டும். பிள்ளை எதனை விரும்புகிறது என்பதைப் புரிந்து கொண்டு அதன் வழியிற் சென்று பாடத்தைப் படிப்பிக்க வேண்டும். அப்போது தான் பிள்ளை எதிர்ப்பின்றி விருப்புடனும் ஆர்வமுடனும் கல்வி கற்கும். ஆகவே குழந்தை உள்ளங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு இன்றியமையாததொன்றாகும். " தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் " என்பார்கள் எனவே முதன் முதல் இங்கே பழகும் பழக்கம் தான் அவர்களது வாழ்க்கையின் அடி அத்திவாரமாகும். இதில் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் பெரும்பங்கு வகிப்பர்.

" இளமையிற் கல்வி சிலையில் எழுத்து " என்பதற்கிணங்க எமது கழக நிர்வாகத்தின் கீழுள்ள அரசடி ஞானக்குழந்தை இல்லமும் சின்னஞ்சிறு சிறார்களுக்கு முன்கல்வி போதிப்பதில் முன்னணியில் திகழ்கின்றது. குழந்தைகளுக்கு ஏற்றாற் போல் தாங்களும் மாறி அவ்வப்போது அந்தந்தப் பாத்திரங்களை ஏற்று மிகுந்த திறமையுடன் கடமையாற்றும் அரசடி ஞானக்குழந்தை இல்ல ஆசிரியைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஓர் ஆசிரியைக்கு என்னென்ன தகைமைகள் இருக்க வேண்டுமோ அத்தனையும் நிறைந்து காணப்படும் இவர்கள் அனைவருமே மிகவும் சமர்த்தர்கள். சிரித்த முகத்துடனும் சாந்த தோற்றத்துடனும் அவர்கள் குழந்தைகளுடன் பழகும் விதமே அலாதி.

தமது குழந்தைகள் நன்கு படித்து முன்னேறி சமுதாயத்தில் நல்லவர்களாக வாழ வழி சமைத்துக் கொடுப்பார்கள் என்ற நோக்கில் வரும் ஒவ்வொரு பெற்றோரும் நிச்சயம் இவர்களினால் ஏமாற்றமடைய மாட்டார்கள்; தங்களுடைய பிள்ளைச் செல்வங்கள் பேசும் மழலை மொழியின் கிறக்கத்திலே மயங்குண்டு போகும் பெற்றோர் அரசடி ஞானக்குழந்தையின் ஆசிரியைகளின் அன்பான அரவணைப்பில் மகிழ்ந்து போவது கண்கூடு.

பாலர்கல்வியின் முக்கிய நோக்கங்களிலொன்று மாணவர்களிடையே நடத்தை மாற்றத்தை உருவாக்குவதாகும். இளம் சிறார்கள் தமது ஆரம்ப பழக்க வழக்கத்தை பாலர் பாடசாலையிலேயே பழகிக் கொள்கிறார்கள். ஆரம்ப முன்

பள்ளிக் காலத்தில் தான் படிக்கும் ஆசிரியர் களுக்கும் பெற்றோர்களுக்கும் அந்நியோந்நிய உறவு ஏற்படுகிறது. அதாவது இருவருக்கு மிடையே நெருங்கிய தொடர்புகள் இருக்க வேண்டும். அப்போது தான் குறை நிறைகளை அறிந்து திருத்த முடியும், ஒவ்வொரு முறையும் சந்திக்கும் போது முன்னர் ஏற்பட்ட நிகழ்வு களினூடாக பிள்ளையின் முன்னேற்றத்திற்கு ஏற்ற வழிவகைகளைக் கைக்கொள்ள முயற்சி எடுக்கப்படும். இஃது குழந்தையின் வளர்ச்சிக் கும் எதிர்கால சுபீட்சத்திற்கும் ஆணிவேராகும்.

குழந்தைகளுக்குக் கல்வி ஊட்டும் போது ஆசிரியரானவர் பலவித பாத்திரங்களை வகிக்க வேண்டும். சில வேளைகளில் நிச்சயம் அவ்வாறு மாறியே ஆக வேண்டும். ஓர் ஆசிரியையானவர் பின்வரும் வேடங்களைத் தரிக்க வேண்டும் என் கிறார் ஒய்ஸர் என்னும் அறிஞர்.

1. ஆலோசகரும் நிபுணரும்
2. அடைவை மதிப்பீடு செய்பவர்
3. ஒழுக்கத்தையும் அறநெறியையும் பாது காப்பவர்
4. வரையறைகளை உருவாக்குபவர்
5. நண்பரும் வழிகாட்டியும்
6. பொலிஸ் அதிகாரி
7. நீதிபதி

மேற்குறிப்பிட்ட ஏழு அம்சங்களும் எமது பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழுள்ள அரசடி ஞானக்குழந்தை இல்ல ஆசிரியைகளிடம் நிறைந்து காணப்படுகின்றன எனக்கூறின் மிகை யாகாது.

அது மாத்திரமின்றி பாலர் கல்வி போதிப் பதில் தாம் எந்த விதத்திலும் சளைத்தவர்க ளல்லர் என்பதை பலவித நிகழ்வுகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். சரஸ்வதி பூஜை கலை விழா, பேச்சுத் திறன் காணும் வைபவம் விளையாட்டுக்கள் முதலியன மூலம் இவர்கள் தமது திறமைகளைக் குழந்தைகள் மூலமாக வெளிக்காட்டியுள்ளனர். மேலும் பொதுநலவாய நாடுகள் அலுவலக வெளியீடுகளில் சிறு குழந் தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழிற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகையில்,

அ. கல்வி மூல வளங்களை ஒன்று சேர்த்தல்

ஆ. கற்பித்தற் தொகுதிகளை திட்டமிட் டுச் செயற்படுதல்

இ. குழந்தையின் அறிவு விருத்திக்கு வித் திடல்

ஈ. குழந்தையின் சிந்தனையைத் தூண்டி விடுதல்

உ. குழந்தையின் தேவைகளை அறிந்து அதற்கேற்றாற் போல் கல்விச்சூழலை உருவாக்குதல்

ஊ. சிறந்த மானுடத் தொடர்புகளை வளர்த்தல்

என்பன பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள் ளன. இதுபற்றி நன்கு ஆராய்ந்து கொண்டு போனால் பாலர்கல்வி என்பது எவ்வளவு தூரம் சிரமத்தின் மத்தியில் கற்பிக்கப்படுகின்றது என் பது சொல்லாமலே விளங்கும். இதற்கு அரசடி ஞானக்குழந்தை இல்ல ஆசிரியைகளும் விதிவிலக் கல்லர். குழந்தைப் பராயம் யாவரும் விரும்பும் பராயம் அந்தப் பராயத்தில் தான் குழந்தை உலகத்தின் கண் உள்ள அதிசயங்களையும் அதன் மூலம் பெறப்படும் பயன் விளைவுகளை யும் அறிய ஆரம்பிக்கும். அந்த நேரத்தில் பெற் றோரும் ஆசிரியைகளும் மிகுந்த கரிசனையுடன் செயற்பட வேண்டும். ஒரு சிறு தவறு ஏற்பட நேர்ந்தாலும் அதனால் வரும் விபரீத விளைவு களைச் சமாளிக்க முடியாமற் போய்விடும்.

" ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளை யுமா? " என்று ஒரு பழமொழி உண்டு. இந்த வயதில்தான் நல்ல பழக்க வழக்கத்தை ஏற்ப டுத்தப் பழக்க வேண்டும்.

" கேட்கிறேன், மறந்து விடுகிறேன், பார்க் கிறேன், ஞாபகமிருக்கின்றது, செய்கிறேன், விளங்கிக் கொள்கிறேன் " என்று உளவிய லாளர் கூறுவதும் இதன் அடிப்படையிலேயே.

எல்லாவற்றுக்கும் மேலாக எதற்கும் ஒரு நேரம் உண்டு. ஒவ்வொன்றும் அந்தந்த நேரத் திலே செய்தாற்றான் சிறப்புறும்; பருவத்தே பயிர்செய். இது மிகவும் உற்றுநோக்கத்தக்க ஒரு விடயம் ஏனெனில் பிள்ளை விஷயத்தைக் கிர கிக்க ஒரு நேரத்தில் தான் விரும்பும். மற்ற நேரத்தில் விரும்பாது அதை மிக அவதானமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கருத்தில் கொண்டு நாம் விஷயங்களைத் திணிக்க வேண்டும். எல்லா நேரத்திலும் பிள்ளை பாடங்கேட்க விரும்பாது. எனவே உளவியல் ரீதியாக குழந்தையின் உள்ளத்து ஆழத்தை அளந்து கற்பித்தலை நடைமுறைப்படுத்த வேண்டும். குழந்தை மிகவும் சுறுசுறுப்பாகக் கற்பித்தலை அவதானிக்கின்றதா என்பதை கவனிக்க வேண்டும். குழந்தைகள் சிறிய முதியவர்களல்லர் என்பது உளவியலாளர் ரூசோவின் கூற்று.

எரிந்து கொண்டிருக்கும் விளக்கிலிருந்து தான் இன்னும் பல விளக்குகளை ஏற்றலாம். ஆகவே குழந்தைக் கல்வியை ஊட்டுகின்ற ஆசிரியைகள் எப்போதும் கற்றுக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருத்தல் வேண்டும். மேலும் அரசடி ஞானக்குழந்தை இல்ல ஆசிரியைகள் பண்பின் சிகரங்கள். ஞானத்தின் திருவுருவங்கள் அவர்கள் தமது முழு நேரத்தையுமே இந்தப் பாலர்களின் முன்னேற்றத்திற்காகவே செலவிடுகின்றார்கள். இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம் என்றால் நுங்கள் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோருமே நல்ல நிலைக்கு வரவேண்டுமே என்ற வேணவாதான். இஃது அவர்களின் முன்னேற்றப் பள்ளியாகும். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பல ஆசிரியர்களாலும் கட்டிக் காத்து வளர்த்து வந்த இஞ்ஞானக் குழந்தை இல்லம் இன்று நல்ல பேருடன் முன்னணியில் திகழ்கின்றது என்று கூறினால் அது யாழ் பாலர் கல்விக் கழகமும் அரசடி ஞானக்குழந்தை இல்லமும் சேர்ந்து ஆற்றிய சேவையால் தான்: ஆகவே யாழ் பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இன்று வெள்ளிவிழாக் காணும் அரசடி ஞானக்குழந்தை இல்லம் மென்மேலும் சிறந்த பணியாற்றி வையகம் போற்றும் உலக உத்தமர் பலரை உருவாக்கித் தரவேண்டும் என்று வாழ்த்துக் கூறி வழுத்துவது என் கடமை. கழகப் பத்திராதிபர் என்ற முறையில் இந்த அரசடி ஞானக்குழந்தை இல்லம் ஒரு சிறுவர்கள் பராமரிப்புப் பல்கலைக் கழகம் என்று கூறுவதில் பெருமையடைகிறேன்.

வாழ்க அரசடி ஞானக்குழந்தை இல்லம்!
வளர்க அதன் தொண்டும் சேவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுச் சேலைகளின் சோலைவனம்

உங்கள் எண்ணம்போல்

அனைத்து பிடவைகளையும் தெரிவு செய்து

மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

லிங்கம் பூங்கா

இல. 6, சந்தோசம் தெரு,

(கஸ்தூரியார் வீதி)

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐஸ் கிறீம் வகைகள், ஐஸ் கோப்பி,

ஐஸ் ஜெலி, சொக்கலட் கிறிப்ஸ்,

ஸ்ரோபறி கிறீம்

குளிர்பான வகைகள் சிற்றுண்டி வகைகள்

மற்றும்

கேக் வகைகளை

ஓடர் செய்து பெற்றுக்கொள்ள

கல்யாணி குளிரகம்

[கல்யாணி கிறீம் ஹவுஸ்]

இல. 73, சந்தோசம் தெரு,

(கஸ்தூரியார் வீதி)

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ புதிய றொபின் சோப் ”

றெக்கிட் அன் கொல்மன் தயாரிப்புக்களின்

ஏகவிநியோகஸ்த்தர்

வி. மு. சண்முகம்

இல 85, கேணல் கிட்டு சாலை, (ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு சாதனப் பொருட்கள்

விற்பனையாளர்

ரட்ணம் அழகுச்சோலை

இல. 31 A, நவீன சந்தை

யாழ்ப்பாணம்.

கண்ணைக்கவரும் வண்ணத்தில் புகைப்படங்கள்

பிடித்துக்கொள்ள நாடுங்கள்.

நேரு போட்டோ

(கேணியடி ஒழுங்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி வழியாக)

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்கல்வியின் நோக்கமும் பயன்பாடும்

க. குமாரசாமி

உடற்கல்வி என்றால் என்ன? பொதுக்கல்வியின் இலக்குகளை அடைவதற்கு ஒரு மார்க்கமாக இருப்பது உடற்கல்வி. கல்வி என்ற பதம் இங்கு ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எனவே உடற்கல்வி எவ்வாறு மாணவர்கட்கு கல்வி புகட்டுகின்றது என்பதை வெளிப்படையாகத் தெரியப்படுத்துதல் வேண்டும். உடற்கல்வி உடலிற்கான கல்வி. உடலிக்கு ஊடான கல்வி. ஒரு முயற்சியைப் பிள்ளை செய்யும் போது இரண்டு வரையறையான கல்வியைப் பிள்ளை பெறுகின்றது.

(1) உடல் விருத்தியும்

(2) அந்த முயற்சிகளிற் சந்தித்த அனுபவ ரீதியான அறிவையும் பெறுகின்றனர்.

எனவே தான் உடற்கல்வி உடலிற்கான கல்வி. உடலிற்கு ஊடான கல்வி எனக் கொள்ளப்படுகின்றது.

உடற்கல்வியின் நோக்கங்கள் என்ன என்பதை நாம் அறிந்திட வேண்டுமாகில் பொதுக்கல்வியின் தற்காலக் கோட்பாட்டிற்கும் தத்துவங்கட்கும் ஈடு பாடுடையதாகவே அவை அமைய வேண்டும் என்பது தீர்மானத்திற்குரியது. இந்த நோக்கங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(1) உடனடித் தேவை

(2) பொதுவான தேவை

(5) இறுதி இலக்கு / அறுதி இலக்கு

1. உடனடித் தேவைகள் என்பது ஒரு பிள்ளை முயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது அந்த முயற்சியில் அப்பிள்ளையின் உடல் சார்ந்த விருத்தி.

(2) பொதுவான நோக்கங்கள் முயற்சியின் அனுபவங்கள் மூலம் ஏற்படுகின்ற விளைவுகள். அவை திறன் விருத்தி, சட்டங்களுக்கு அமைதல், மன எழுச்சி, நிதானம், கூட்டுறவு இணைந்து நடத்தல், தலைமை ஏற்றல், தலைமை வகுத்தல் போன்ற குண இயல்புகளைக் கொண்டதாகும்.

(3) இறுதி இலக்காகிய நல்ல பிரஜைகளை உருவாக்குவதே இதன் முடிவான நோக்கம் ஆகும். அதுவே இலக்கு எனக் கொள்ளப் படும்.

இம் மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைத்து உடற்கல்வியின் நோக்கத்தை முழுமையாகப் பார்த்தால் அவ் நோக்கம் பின்வருமாறு அமையும் என நவீன உடற்கல்விப் பேராசானுக்குள் ஒருவரான சாள்ஸ் ஏ புரட்சர் பின்வருமாறு கூறியுள்ளார். " பொதுக் கல்வியின் மார்க்கத்தில் உடற்கல்வி இன்றியமையாத கூறு "

நன்கு தெரிவு செய்யப்பட்ட உடற்கல்வி முயற்சிகள் மூலம் ஒருவனின் உடல் உள மன எழுச்சி சமூக ஆத்மீக விருத்திகளை வெளிப் படுத்தக் கூடிய உடல் முயற்சிகள். விளைவுகளை ஏற்படுத்துவதற்கு எத்தனிக்கும் ஒரு மார்க்கமே உடற்கல்வி ஆகும். இந்த நோக்கங்கள் எவ்வாறு பெறப்படுகின்றன என்பதைக் காண முற்படுவதற்கு முன் பண்டைய தற்கால வாழ்க்கை முறை தொடக்கம் இன்றுவரை உடற்கல்வியின் தேவை எவ்வாறு அமைந்தது என்பதைச் சற்று அறிவது முக்கியமாகும்.

முற்கால மனிதனின் உடற்கல்வி முக்கியமாக அவனது உயிரைப் பாதுகாப்பதாகவே இருந்தது. அதற்கு ஒரு வழமையற்ற, உருவமற்ற நிலைமையே காணப்பட்டது. எதிரியுடன் சண்டையிட; தங்குமிடம் அமைக்க, உணவுதேட இயற்கையின் விளைவுகளைத் தாங்குவதற்கும் தேவையான உடற்பலமும் உடல் வலிமையுமே அவர்கட்குத் தேவைப்பட்டது. முதன் முதலில் உடற்கல்விக்கு ஒரு யாப்பைக் கொடுத்தவர்கள் கிரேக்கர். தமது இளைஞர்கட்குத் தசைப்பயிற்சி தாய்மொழி, சங்கீதம், நடனம் கற்பிக்கப் பட்டது.

இக்கால கட்டத்தில் எவ்வாறு உடற்கல்வி உணரப்பட்டது என்பதைக் கிரேக்க தத்துவ ஞானியாகிய பிளேட்டோவின் கருத்துக்களிலிருந்து தெரிய வருகின்ற கருத்தின்படி உடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்திக்கு உள ஆரோக்கியம் முக்கியம். எனவே உடற்கல்வி வெறுமனே உடல் விருத்தியை மாத்திரம் வழங்குவதல்ல, அதற்கு வேறு கல்வி சார் நோக்கங்களும் உண்டு என உணரப்படுத்தியது இந்தப் பிளேட்டோவின் கருத்து. அன்று தொடக்கம் இன்றுவரை மெய்யியலாளர்களையும் உடற் கல்வியாளர்களையும் இது ஈர்த்து நிற்கின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் 1880ஆம் ஆண்டளவில் ஏதோ ஒரு விதத்தில் இருந்த உடற் கல்வி 1900 ஆண்டுப் பகுதிகளில் உடல் ஊடான கல்வியுடன் உடலிற்கான கல்வி என்பது வற்புறுத்தப்பட்ட உடற்கல்வித் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது,

1934ஆம் ஆண்டளவில் உடற்கல்வி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுப்படி உடற்கல்விக்கு விஞ்ஞான ரீதியான நோக்கங்கள் கொடுக்கப்பட்டு இந்த நோக்கங்களை ஐவகைப்படுத்தினர்.

(1) உடல் தகுதி
(2) உள ஆரோக்கியத் தகுதி
(3) சமூகக்குண இயல்புகள்
(4) மனவெழுச்சி வெளிக்காட்டலும் கட்டுப்படுத்தலும்
(5) இரசித்தலும் நயத்தலும்

இந்த நோக்கங்கள் யாவும் அறிவுத் திறன், மனப்பாங்கு எவ்வாறு உண்டாகின என்று முடிவெடுக்கப்பட்டன- சமூகத்தின் மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் தேசிய வாழ்வு முறையிற் பெருந் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உலகு பூராகவும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனாற் புதிய புதிய சவால்கள் தானாகவே சமுகத்தை வந்தடைகின்றன

இந்தச் சாவால்களுக்கு எமது சமூகமும் விதிவிலக்கல்ல தனிப்பட்டவர்கள் வாழ்விலும் தேசிய வாழ்வு முறையிலும் ஏன் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அரசியல் அமைதியின்மை, சமூக ரீதியான பிரச்சனைகள், பொதுவான காரணங்கள் ஆகும். ஆட்சி முறை அதிகாரத் துஷ்பிரயோகம் என்பன அரசியல் சார்ந்த பெரும்பான்மை, சிறுபான்மை வேறுபாடு இன ஒதுக்கல், வறுமை, குற்றங்கள், இருப்பிட வசதியீனங்கள், சனப்பெருக்கம் என்பன சமூகப் பிரச்சனைகள். இவற்றோடு விஞ்ஞான விருத்திகளும், ஆய்வுகளும் மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றிற்கு ஈடு கொடுப்பதற்கான சவால்களையும் ஏற்படுத்தி உள்ளது. இதற்கு மேலான போதைவஸ்துப் பிரச்சனைகளில் பெண் விடுதலை, தனிமனித சுதந்திரம், மாற்றங்களில் முக்கிய பங்களிக்கின்றன. இந்த மாற்றங்களினாற் கல்வியிற் பாரிய தடங்கல் ஏற்பட்டுள்ளது. கல்வி ஏற்றுள்ள இதற்கான சாவால்களை உடற்கல்வியும் பெருமளவு ஏற்க வேண்டும் என்பதே இன்றைய நிலை ஆகும்.

எமது அரசியல் சமூகப் பிரச்சினைகளினால் எழுந்ததே இந்தத் தவிர்க்க முடியாத சுதந்திரப் போராட்டம், அரசியல், சமூகப் பாகுபாடுகளும் அடக்கு முறைகளும் உரிமைகளைப் பறித்தலும் என்பனவால் ஏற்பட்ட சவால்களைச் சமாளிப்பதற்குக் கட்டாயமானது என்பதே இன்றைய சூழல். எனவே எமது பாடசாலை உடற்கல்வியும் எமது சமூகத்தின் இன்று தேவைப்படும் நோக்கங்களை ஈடு செய்யக்கூடியதாக அமைய வேண்டும். இந்த நோக்கங்கள் ஈடேறும் பட்சத்தில் மற்றவர்க்கு ஏற்ப கல்வி நோக்கங்கள் மாற்றமடைய வேண்டும் என்ற சிந்தனை நிறைவேறியதாசக் கருதலாம்.

மனித வாழ்வு துரிதமும் பிரயாசையும் காலப் போக்கில் இணையத் தொடங்கியது.

விஞ்ஞான விருத்திகள், கைத்தொழில் மாற்றங்கள், மனித தேவைகள் குறைந்து இயந்திர சாதனம் மூலம் தேவைகளை நிறைவேற்றத் தொடங்கியது. இதனால் மனிதனுக்கு வேலைப்பழு குறைந்தது. ஓய்வு நேரங்கள் கூடப்பெற்றன. இந்த வாழ்க்கைமுறை உடல் அமைப்பையும் உள்ளத்தையும் குண இயல்புகளையும் மிகவும் பாதிப்புக்குள்ளாக்கியது. இந்தச் சவால்களை மாற்று வழியாக அவனுக்கு ஏதோ ஒரு வகையில் உடற்கல்வி இருக்க வேண்டும் என்ற தேவையை ஏற்படுத்தியது. அதன் பொருட்டே இந்த நவீன உடற்கல்வி முறை ஏற்படுத்தப்பட்டது.

க. குமாரசாமி
முதன்மை ஆசிரியர்,
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆசிரியைகள் - 1995

இடமிருந்து: செல்வி.ச. சசிதேவி, செல்வி. கு. அருந்ததிதேவி (பொறுப்பாசிரியை) செல்வி. இ. சிவமனோகரி, செல்வி. கு ஜெயகௌரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகால ஆசிரியை செல்வராணி - மாரிமுத்துவின்
அனுபவத்திலிருந்து சில வரிகள்.......

செல்வி. மாரிமுத்து செல்வராணி

1974ம் ஆண்டிலிருந்து எனது சேவையைப் பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஞானக்குழந்தை இல்லம் அரசடி வீதியோடு ஒரு உதவி ஆசிரியையாக இணைத்துக் கொண்டேன்.

முதன்மை ஆசிரியை செல்வி கங்கேஸ்வரி பொன்னுத்துரை விலகியதிலிருந்து நான் முதன்மையாசிரியையாகப் பொறுப் பேற்றேன். எனக்கு உதவி ஆசிரியையாக செல்வி கிருஷ்ணசாமி சித்திராணி நியமனம் பெற்றார்.

இக்காலப் பகுதியிலே என்னிடம் 50 பாலமாணவர்கள் இருந்தார்கள். அது தொடக்கம் அவர்களிடமிருந்து நான் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலானேன்.

ஒரு குழந்தையானது தன் தாயிடமிருந்து பாலரைப் பயிற்றும் ஆசிரியர்களாகிய எம்முடைய பராமரிப்புக்கு வரும் பொழுது தான் பழகப் போகும் அல்லது பெரிதும் வாழப்போகும் சூழல் இதுதான் என்பதிற் தெளிவிருக்காது. பெற்றோர்கள் பலர் அதைக் குழந்தைக்கான பாஷையில் விளங்கப்படுத்துவதுமில்லை. இத்தகைய மனநிலையோடு என்னை நாடிவந்த பல பாலர்களை ஆரம்பத்தில் சமாளிப்பது எனக்கும் பெரிய சிரமமாக இருந்ததைத் தனியொரு அனுபவமாகத்தான் இவ்விடத்தில் சுட்டுவேன். சிறிது நாட்களில் '' அன்பு '' என்ற மூன்றெழுத்துச் சொல்லிற்குக் கட்டுப் படாத குழந்தைகள் இல்லையென்பதை அறிந்து அவர்களுடைய மெல்லிய உணர்வுகளுக்கு ஏற்ப வளைந்து கொடுத்து அவர்களைப் பாடசாலைச் சூழ்நிலைக்கு ஏற்ப பழக்கப்படுத்த முற்படலானேன். வீட்டுச் சூழல் பிறிதொன்று; பாடசாலைச் சூழல் பிறிதொன்று என உணராமல் இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்து வாழக் கூடிய அதிகவேறுபாடு இல்லாத சூழல் எனச் செய்து விடுவேன் பாலர் கல்வியில் இது முக்கியமானது.

இக்காலப் பகுதிகளில் எனக்கு உதவியாசிரியர்களாகக் கடமையாற்றிய செல்வி மஞ்சுளா நாகலிங்கம், செல்வி தனலக்சுமி திருநாவுக்கரசு, செல்வி அபிராமி, செல்வி விஜித்தா, செல்வி நிர்மலா சிவகுருநாதன் ஆகியோர் இப்பாலரைப் பயிற்றும் அனுபவத்தைப் பெற்றவர்களாவர்.

யாழ்ப்பாணச் சூழலிலிருந்து நான் பெற்ற அனுபவங்களிலிருந்து இங்கு (France) பிரான்ஸ் நகரத்தில் பெறும் அனுபவம். முற்றிலும் வேறுபாடானது. இங்கு தாய் தந்தை. இருவருமே வேலை செய்பவர்களாக இருப்பதால் குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையத்திற்குப் பிள்ளைகளை ஆரம்பத்திலேயே அனுப்பி விடுவார்கள். (Creche) 'கிரஷ்' எனப் பெயர் பெறும் இந் நிலையத்தில் குழந்தையானது தனது 03 வயது வரை இருக்க அனுமதி பெறுகின்றது.

ஆங்கில மரபில் Nursery எனக் குறிப்பிடுவதனை இங்கு E' cole Mater necle

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடுவார்கள். இங்கு தான் பாலர் பாடம் 03 – 06 வரையான காலப் பகுதியில் நடைபெறும். எனது கண்ட கேட்ட அனுபவங்களின் படி இந்த E' cole Mater necle. நிறுவனத்திலே குழந்தையொவ்வொன்றும் மிக மிகச் சுயாதீனமான முறையில் வளர்க்கப்படுகின்றது. இங்குள்ள ஒவ்வொரு குழந்தையும் தத்தம் வீட்டில் இருப்பதை விடத் தமது வயதை ஒத்த தோழர்களுடன் மிக மிகத் திருப்திகரமாக இருப்பதையும் உணர முடிகிறது.

எனது அனுபவப்படி இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் பாலரைப் பயிற்றும் ஆசிரியர்களுக்கு நான் சிறியதொரு அறிவுரையை இச்சந்தர்ப்பத்திற் கூற விரும்புகிறேன். என்னவெனில், குழந்தைகள் மிகவும் மெல்லிய உணர்வு கொண்டவர்கள் யாழ்ப்பாண யுத்தச் சூழல் திடீர் திடீரென ஏற்படுத்தும் தாக்கங்கள் அச் சின்னஞ் சிறியவர்களின் மனதில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே மெல்லிய உணர்வுகளைக் கொண்ட குழந்தைகளை உலகின் கள்ளங் கபடமற்ற தெய்வங்களை அன்பால், பண்பால், வளருங்கள். அவர்கள் வாழும் சூழலைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு வழி காட்டுங்கள்.

நீண்ட காலம் நான் விரும்பி நடமாடிய சூழலில் - 'பாலர் பாடசாலையில் "வெள்ளி விழா" கொண்டாடப்படுவதை அறிந்து மிக மகிழ்கிறேன். மனதார வாழ்த்துகிறேன்.

"வாழ்க வளமுடன்"

செல்வி. மாரிமுத்து செல்வராணி
பிரான்ஸ்

1994ம் ஆண்டில் 14 பாலர் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் சிறந்த வீராங் கனையாகத் தெரிவு செய்து வெற்றிக் கிண்ணம் பெற்ற எமது பாலர் பாடசாலையின் பழைய மாணவி

செல்வி. ஈஸ்வரஜனனி கருணைலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ம் ஆண்டு 14 வயது பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் [illegible] [illegible] [illegible] ஒருவர் [illegible] [illegible] [illegible] பெற்ற மாணவி பாடசாலையின் பெருமை மாணவி

செல்வி. ராஜகுமாரி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகூர்த்தப்
பட்டுப் பிடவைகளுக்கு
பெயர்பெற்ற
ஸ்தாபனம்

SILKS

ராசி பட்டுச்சோலை

70, 71A, நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

RASI SILKS

70 71A, NEW MARKET JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி ஞானக்குழந்தை இல்ல வெள்ளி விழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்

★ றஞ்சனா ★

வண்ண ஆடையகம்

17, 18, 18A, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் பிடைவை வியாபார முன்னணி நிலையம்

சேட்டிங் - சூட்டிங், ஸ்கேட், பிளவுஸ்
மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப் பிடைவைகள்
அனைத்தையும் மலிவாக பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் ஒரே இடம்

லலிதா பட்டுச்சோலை

5, 6, சிறப்பு அங்காடி :-: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போசாக்குக் குறைவினால் ஏற்படும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்

நல்லையா விஜயசுந்தரம்
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
யாழ். மாநகரசபை.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சனைகளுள் போசாக்குக் குறைபாடும் ஒன்றாகும். இதற்கு எமது நாடும் விதிவிலக்கல்ல. எமது நாட்டைப் பொறுத்தவரை போசாக்குக் குறைபாட்டினால் குழந்தைகள், பள்ளி முன்னிலைப் பிள்ளைகள், பெண்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். குழந்தைகள் போசாக்குக் குறைபாட்டிற்கு ஆளாகும் போது அவர்களின் எதிர்காலமும் பாதிப்படைகின்றது. இலங்கையில் மூன்று வயதிற்குட்பட்ட சிறுவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வயதுக்கேற்ற நிறையைக் கொண்டிருக்கவில்லை. இதே வேளை நாலில் ஒரு பகுதியினர் வயதுக்கேற்ற உயரத்தை அடையாதவர்களாக இருக்கின்றார்கள்.

பிறக்கும் குழந்தைகளை பொறுத்தவரை 25% மான குழந்தைகள் இரண்டரைக் கிலோ கிறாமுக்குக் (2500g) குறைவான நிறையுடன் பிறக்கின்றார்கள் இத்தகைய குறை நிறையுடைய குழந்தைகளின் எதிர்காலம் ஆபத்தானதாகவே இருக்கிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை போசாக்குக் குறைபாட்டின் தாக்கம் மிக அதிகமாகவேயுள்ளது. போர் அனர்த்தங்கள், இடம்பெயர்வு, தொழிலின்மை, இடநெருக்கீடு, உளத்தாக்கம் போன்ற பல்வேறு காரணங்கள் போசாக்குக் குறைபாட்டின் அளவை அதிகரிப்பதற்கு ஏதுவாயிற்று. யாழ்ப்பாணத்தில் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 48% மானவர்கள் வயதிற்கேற்ற நிறையைக் கொண்டிருக்கவில்லை. பிறக்கும் குழந்தைகளில் 25% தொடக்கம் 35% மானவர்கள் நிறை குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அதாவது இரண்டரைக் கிலோக் கிராமுக்கும் குறைவான நிறையுடன் பிறக்கின்றார்கள்.

இரும்புச் சத்துக் குறைவினால் ஏற்படும் இரத்தசோகை (Anaemia) க்கு இலங்கையில் 65% மான தாய்மார் ஆளாகியுள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் 80% தொடக்கம் 90% மான தாய்மார் இரத்தசோகைக்கு ஆளாகியுள்ளனர்.

போசாக்குக் குறைபாட்டினால் ஏற்படும் பிரச்சனைகள்

1. பிள்ளைகளிடையே குறைந்த அளவிலான உடல் வளர்ச்சி (Growth) யும் முன்னேற்றம் (Development) உம் காணப்படும்.

2. பிள்ளைகளின் உளவிருத்தி பாதிப்படையும் அதாவது மனித மூளையின் 75% மான வளர்ச்சி குழந்தையின் இரண்டு வயதிற்குள் இடம் பெறுகிறது.

3. போசாக்குக் குறைவினால் நோய் எதிர்க்கும் சக்தி குறைந்து தொற்றுநோய்க்கு ஆளாகும் சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. இதனால் பிள்ளைகள் மீண்டும் போசாக்கின்மைக்கு ஆளாகின்றனர்.

4. தாயின் போசாக்குப் பாதிப்பதால் கர்ப்பகாலத்திலும், பிரசவத்தின்போதும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

5. தாயின் இரும்புச்சத்துப் பற்றாக்குறை நிறைகுறைந்த சிசுக்களை பிரசவிக்க வழி வகுக்கும்.

6. அயடீன் குறைபாட்டினால்
   (i) குழந்தைகளின் காது கேட்பதில், வாய் பேசுவதில் குறைபாடு ஏற்படும்.
   (ii) நிவர்த்தி செய்ய முடியாத உடல் உள குறைபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) கருச்சிதைவு, சிசு செத்துப் பிறத்தல் என்பன ஏற்படும்,

போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

1. கர்ப்பகாலத்திலும், பாலூட்டும் காலத்திலும் தாயினுடைய உணவு மற்றும் பராமரிப்பை நல்ல நிலையில் வைத்திருத்தல்:

(i) தாய்மார் கர்ப்பமுண்டாவதற்கு முன்னர் உட்கொண்ட உணவிலும் பார்க்க கூடுதலான உணவை உட்கொள்ள வேண்டும்.

(ii) கர்ப்பவதிகள் ஒழுங்காக சிகிச்சை நிலையம் சென்று தம்மை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். கர்ப்ப காலத்தில் தாயினுடைய நிறை 10—12Kg ஆகக் கூடி இருக்க வேண்டும்.

(iii) சிகிச்சை நிலையத்தில் கொடுக்கப்படும் சத்து நிறைந்த மாத்திரைகளை ஒழுங்காக உட்கொள்ளல் வேண்டும்,

(iv) குடும்பத்திட்டத்தைக் கடைப்பிடித்தல் அதாவது ஒரு பிள்ளைக்கும் மற்றப் பிள்ளைக்கு மிடையில் குறைந்தது மூன்று வருட இடைவெளியாவது இருத்தல் வேண்டும்.

2. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்தலை ஊக்குவித்தல் (குழந்தை பிறந்தவுடனேயே தாய்ப்பால் ஊட்ட வேண்டும்)

3. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் 4 தொடக்கி 6 மாதங்களுக்கு மட்டுமே போதுமானதாகும். எனவே தாய்ப்பாலுடன் உப உணவுகளையும் குழந்தைகளுக்குக் கொடுத்தல் அவசியமாகும். எனினும் தாய்ப்பாலை குறைந்தது இரண்டு வருடங்களுக்காவது தொடர்ந்து கொடுத்தல் வேண்டும்.

4. (i பிள்ளைகள் நோய்வாய்ப்படும் பொழுது அல்லது நோய் குணமாகியபின் வழமையிலும் பார்க்க ஒரு வேளை உணவாவது மேலதிகமாகக் கொடுத்தல் வேண்டும்.

(ii) குழந்தை நோயுற்றிருந்தாலும் தாய் தொடர்ந்து பாலூட்ட வேண்டும்.

(iii) சாப்பாட்டில் பிரியமில்லாத குழந்தைகளை சாப்பிட ஊக்குவிக்கும் பொருட்டு அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக உணவைக் கொடுத்தல்

குழந்தைக்கு விருப்பமான உணவைக் கொடுத்தல்

5. பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் வளர்ச்சி நிலையினை அறிந்து கொண்டு நிலைமைக் கேற்ப செயற்படுதல். இது விடயத்தில் பெரும்பாலான தாய்மார்கள் அக்கறையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையங்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் பிள்ளைகளின் நிறையினை அளவீடு செய்யும்போது அதனைக் குடும்ப நல சேவையாளரின் கடமையில் ஒன்று என எண்ணி விடாது தமது பிள்ளைகளின் வளர்ச்சியினை அளவீடு செய்ய மேற்கொள்ளும் முக்கிய நடவடிக்கை என்பதனை பெற்றோர்கள் தம் மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். நிறை அளவீட்டின் போது தமது பிள்ளையின் நிறையையும் காலத்தின் அளவிற்கேற்ப பிள்ளையின் வளர்ச்சி போதுமானதா என்பதையும் பெற்றோர் ஐயம் தெளிவுற அறிந்திருத்தல் அவசியம்.

போசாக்குக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதில் பொது அமைப்புக்களின் பங்களிப்பு

(i) இடம்பெயர்ந்தோர்களின் முகாம்களைப் பராமரிக்கும் பொது அமைப்புக்கள் அம்மக்களின் போசாக்கு நிலையை முன்னேற்ற அவ்விடங்களிலேயே போசாக்குத் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல்.

(ii) பாலர் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து பாலர் பாடசாலைகளில் இலைசேர் பாற்கஞ்சி, ஜீவாகாரம் போன்ற சத்துணவுகளைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குதல்.

(iii) சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் தமது பகுதிக்குட்பட்ட மக்களின் போசாக்கு நிலையினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்தும் செயற்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல்.

(iv) அரச சார்பற்ற நிறுவனங்கள் போசாக்குக் குறைபாட்டிற்கு ஆளானவர்களை இனங் கண்டு அவர்களைப் பராமரிக்கும் நிலையங் களை அமைத்து அதனூடாக போசாக்குக் குறைபாட்டினை நிவர்த்தி செய்தல்.

(v) பொது அமைப்புக்கள் குறிப்பாக பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் சுகாதாரப் பகுதியுடன் இணைந்து போசாக்குக் கருத்தரங்குகள், செய்முறைகள், கண்காட்சிகள் ஆகியவற்றை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்கி நடத்தை மாற்றத்தை உருவாக்குதல்.

போசாக்குக் குறைபாடு எதிர்கால சந்ததியை பாதிக்கும் என்பதை சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் உணர்ந்து கொண்டு அதற்கேற்ப செயற்படும் போது தான் போசாக்கு முன்னேற்றத்தில் நாம் வெற்றிகாண முடியும்.

உசாத்துணை நூல்கள்

1. **போசாக்குக் கைநூல்**
   கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு சௌக்கிய அமைச்சு
   யுனிசெப் வெளியீடு

2. **போசாக்குப் பிரச்சனையும் நாம் செய்ய வேண்டியவையும்.**
   யுனிசெப் வெளியீடு

3. **போசாக்கு மஞ்சரி**
   திட்டம் செற்படுத்தல் அமைச்சின் உணவு போசாக்குக் கொள்கைத் திட்டமிடல் பிரிவின் வெளியீடு

4. **சுகாதார அறிவுரைகள்**
   யாழ் மருத்துவ சங்க வெளியீடு

பொம்மலாட்ட உத்திமுறை மூலம்
பாலர்களுக்கு கற்பித்தல்

நீ. செ. செல்வராஜா

சிறுபிள்ளைகள் இயல்பாகவே ஆடல், பாடல், ஆக்கத்தொழிற்பாடு போன்றவற்றில் மிக விருப்புடையவர்கள் அவர்களின் இந்நாட்டத்தைப் பயன்படுத்தி அவர்களை பாடசாலை கட்கு விருப்புடன் வருகைதரச் செய்வதுடன் கற்றற் செயற்பாடுகளையும் மேற்கொள்ள உதவும் ஒரு சிறந்த உத்தியே இப் பொம்மலாட்ட உத்திமுறை.

'' பொம்மலாட்டம் '' என்றதும் அவரவர்களின் அனுபவங்கட்கேற்ப வெவ்வேறு எண்ணக் கருக்கள் மனதில் நிழலாடலாம். கொழும்பில் வெசாக் காலத்தில் நடைபெறும் நூற் பொம்மைகளின் – பலாங்கொட பொம்மலாட்டம் கண்ணில் சிலருக்கு தெரியலாம். இன்னும் சிலருக்கு தொலைக்காட்சியில் காணும் மிக உயர் தொழில்நுட்பம் கொண்ட 'மப்பற்ஷோ அல்லது ' பப்பற்ஷோ ' கண்ணில் தெரியலாம் வேறு சிலருக்கு இந்தோனேஷியா போன்ற நாடுகளில் இடம்பெறும் சமயம் சார்ந்த நிழற் பொம்மலாட்டம் கண்முன் நிற்கலாம்.

ஆரம்பக் கல்வியில் அல்லது முன்பள்ளிக் கல்வியில் '' பொம்மலாட்டம் '' என்றால் பிள்ளைகளை பொம்மைகளை ஆக்கியும் அவற்றின் இயக்கம் செயற்பாடுகள் மூலம் கணிதம், சுற்றாடல், ஆக்கம், அழகியல், சுகாதாரம், பேச்சு, வாசிப்பு எழுத்து என்ற இன்னோரன்ன பாடப்பரப்புகளில் தேர்ச்சி பெறுவதும் என்பது நமது யாழ்ப்பாண கல்வி சமூகம் அறிந்த உண்மை. பிள்ளைகள் கையாள்வதென்பதால் இது சிக்கலற்ற எளிய முறை என்பது புலனாகும். சிக்கலற்ற எளிய முறையானாலும் சிறுபிள்ளைகளை ஈர்த்து வைத்திருக்கத்தக்க மிக்க கவர்ச்சிகரமானதும் கூட. (சிறுபிள்ளைகள் மட்டுமன்றி பெரியோரும் இதனால் ஈர்க்கப்பட்டு பாராட்டியதனை நாம் அனுபவத்தில் கண்டோம்)

இவ்வாறு யாழ் பிரதேசத்தில் ஓரளவு அறியப்பட்ட இக்கற்பித்தல் உத்தி பரவலாக பயன் படுத்தப்பட வேண்டும் என்பது எமது பிரதேச பொம்மலாட்ட முறை மூலம் கற்பித்தலின் பிதாமகரான திரு சி. நாகராஜா அவர்களின் பெருவிருப்பம் அத்துடனன்றி இது இலங்கையின் ஏனைய பிரதேசங்கட்கும் பரப்பப்பட்டு பயன் பெறப்பட வேண்டுமென்பது இதன் நன்மைகளை உணர்ந்து அதற்கு உரமூட்டியவர்களான திரு கு. சோமசுந்தரம் (பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகம், தமிழ்ப்பிரிவு) கலாநிதி செல்வி சி. இராஜரட்ணம் போன்ற கல்வியியலாளர்களின் உரத்த சிந்தனை ஆகும். இது இங்கிருந்து தென்கிழக்காசியா, ஆசியா கண்டம் மட்டுமல்லாது உலகம் முழுவதுக்கும் பரவ வேண்டிய வெகு பொருத்தமான ஒரு கற்பித்தல் முறை என்பது இதனை பிரக்ஞை பூர்வமாக அறிமுகப்படுத்துவதிலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டவருமான ' ஆரம்பக் கல்வி வித்தகரான ' அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தன் அவர்களின் அசையாத நம்பிக்கை.

ஏனெனில் ஆரம்பக் கல்விப் பராயத்தில் பார்த்தல், கேட்டல், உணர்தல் போன்றவற்றில் பாரிய வளர்ச்சி ஏற்படுவதோடு, பேச்சில் வியக்கத்தக்க விருத்தி ஏற்படுகின்றது என்பது ஆராய்ச்சி முடிவு. இப் பராயம் தான் முழுமையான மனிதனின் அடித்தளம். அடித்தளம் உறுதியாக இருக்க வேண்டியது அவசியம். சில வளர்ச்சி அடைந்த நாடுகளில் இப் பராயத்து பிள்ளைகளின் கல்வி அறிவூட்டலுக்குப் பயன்படும் உயர் தொழில்நுட்ப கற்பித்தல் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, கணணி, திரைப்படம் போன்ற சாதனங்களில் ஆசிரியருக்கும், மாணவர்கட்கும் இடையிலுள்ள தொடர்பு உயிரோட்டம் அற்றதாக இருக்கும். இவற்றால் கற்பவர்களின் வேறுபாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறான அனுபவங்களை வழங்குவதும் இயலாத காரியம்.

ஆனால் பொம்மலாட்ட முறையில் இக் குறைபாடு இல்லை. அல்லாமலும் முழு உலகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதும் சமகால கல்வி குறிக்கோள்களில் ஒன்றான பிரதேசங்கள் நகரங்கள் கிராமங்கள், நிறுவனங்கள் என்ற வேறுபாடின்றி சகலருக்கும் சமமான கற்றல் சந்தர்ப்பமும் இப் பொம்மலாட்ட முறைமூலமே வழங்கப்படலாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஏனெனில் இது வளர்ச்சியடைந்த நாட்டிற்கும் பொருத்தமாது. மூன்றாம் உலக நாடு ஒன்றின் தொலைதூர கிராமம் ஒன்றிற்கும் பொருத்தமானதும் ஆகும்

முழு உலகினதும் மற்றொரு கல்விச் குறிக்கோளான தனியாட்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு வரினதும் திறன்களுக்கும் ஆற்றல்களுக்கேற்பவும் கல்வி அனுபவத்தைதப்பெற இப் பொம்மலாட்ட உத்தி முறைமூலமே வாய்ப்பு ஏற்படுகிறது.

அல்லாமலும் வெவ்வேறு பிரதேசத்திற்கு ஏற்ப அவ்வப் பிரதேச வளத்தினை இதில் பயன் படுத்தலாம் என்பது இதன் இன்னோர் சிறப்பியல்பு. நாட்டுக்குநாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் பொருந்தாதவற்றை நீக்கி பொருந்தக் கூடியவற்றை தெரிந்தெடுத்து பயன்படுத்த இதில் சந்தர்ப்பமுண்டு. ஒரு பொம்மை தலையை ஜெர்மனி தேசத்து ஆசிரியர்களும் பிள்ளைகளும் "பிளாஸ்டர் ஒப் பரிஸ்" என்ற வெண்களியில் செய்தால் இங்கு இரண்டுவெறும் சிரட்டைகளைப் பயன்படுத்திச் செய்யலாம். ஜப்பானில் நவீன இலத்திரனியல் சாதனத்தினைப் பயன்படுத்தி கோழி வெட்டுருப் பொம்மை ஒன்றை இயக்கினால் இங்கு எமது தன்னியக்கதெருப் படலை (கேற்) அல்லது கிணற்று துலா முறையைப் பயன்படுத்தி இயங்க வைக்கலாம்.

சிக்கலான உணர்வுகளுடன் கூடிய நடத்தை உடைய சிறுவர்களின் அனைத்துப் புலன்களையும் சேர்த்து வைத்து எண், எழுத்தை மட்டுமன்றி முழு உலக அறிவினையும் ஒருசேர வழங்கும் பொம்மலாட்டமுறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுமூலம் நுண்ணறிவு வளர்ச்சியினை அதிகரிக்கச் செய்கிறது.

கல்வி நிகழும் மூன்று அம்சங்களின் பொருத்தப்பாடான கற்பவர்- அதாவது மாணவன், கற்பிக்கப்படுபவை- அதாவது பாடவிடயம் பற்றிய அறிவிருந்தால் அடுத்த பிரதான அம்சமான அடிப்படைமூலம் அதாவது கல்வியூட்டும்விதமான பொம்மலாட்ட முறைமூலம் கற்பிப்பதனை மூன்று நாட்கள் நாளொன்றிற்கு எட்டு மணி நேரம் களப்பயிற்சியிலீடுபடுவதன் மூலம் கற்றுக் கொள்ளத்தக்கவாறு பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெறுவதன் மூலம் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தம்மை முழுமையானவர்களாக்கி கொள்ள வேண்டும்

ஞானக்குழந்தை இல்லம்—அரசடி

மேற்படி பாலர் பாடசாலையில் இற்றைவரை கல்வி கற்பித்த

ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்

1. செல்வி கங்கேஸ்வரி பொன்னுத்துரை
2. ,, சுந்தரவதனா தம்பித்துரை
3. ,, இசைஞானி சிவசம்பு
4. ,, சித்திராதேவி கிருஸ்ணசாமி
5. ,, அன்னலட்சுமி தம்பு
6. ,, செல்வராணி மாரிமுத்து
7. ,, மஞ்சுளா நாகலிங்கம்
8. ,, வினோதினி கந்தையா
9. ,, தனலட்சுமி திருநாவுக்கரசு
10. ,, ராகினி நடராசா
11. ,, நிர்மலாதேவி சிவகுருநாதர்
12. ,, ஸ்ரீரஞ்சினி இரத்தினசிங்கம்
13. ,, நிர்மலாதேவி சதாசிவம்
14. ,, நித்தியலட்சுமி பொன்னையா
15. ,, சசிகலா குணரத்தினம்
16. ,, மாலதி தியாகராசா
17. ,, தமயந்தி இலங்கநாதன்
18. ,, சத்தியதேவி சரவணமுத்து
19. ,, ஜெயகௌரி குணரத்தினம்

தற்போது கற்பிக்கும் ஆசிரியைகள்

1. செல்வி அருந்ததிதேவி குலநாயகம்
2. ,, சிவமனோகரி இராஜேந்திரம்
3. ,, சசிதேவி சண்முகநாதன்
4. ,, வதனா சுகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி வீழாக்காணும் அரசடி ஞானக்குழந்தை இல்லம்
வளர்ச்சியுற வாழ்த்துக்கள்

இன்றைய நாகரீகத்தோடு இணைந்த இயற்கை எழிலூட்டும் அழகிற்கு அழகான

சாறிவகைகள், சேட்டிங் - சூட்டிங், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள்,
சிறுவர் சிறுமியருக்கான ரெடிமேட் உடைகள், சூட்வகைகள், வேட்டி சால்வைகள்,
ரெடிமேட் சேட் வகைகள்.

சரண்யா துணியகம்
CHARANYAH TEXS

174, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்

அரசடி ஞானக்குழந்தை இல்ல வெள்ளி விழா மலர் சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

ராஜா விற்பனை நிலையம்
RAJA TRADE CENTRE

இல. 03, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

பிளாஸ்ரிக் வகைகள், எவர்சில்வர் அலுமினிய பாத்திரங்கள்,
சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள் போன்ற உங்கள் தெரிவுகளை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளுவதற்கு
வருகை தாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில்

துவிச்சக்கர வண்டிகள் என்றதும்

நினைவில் வருவது

வெங்கடேஸ்வரா

இல. 79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ அரிசி, பருப்பு வகைகள்

★ பால்மா, பிஸ்கட் வகைகள்

அனைத்தையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள

நாகேஸ்வரி களஞ்சியம்

யாழ்/இந்துக் கல்லூரி அருகாமை

இல. 743, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்

★ அசல் 22 கரட் தங்க நகைகள் ★

உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

★ VINO NAKAI POONKA ★

உரிமையாளர்: சடாச்சரம் புவிச்சந்திரன்

—வினோ நகைப் பூங்கா—

185, சந்தோசம் தெரு

(கஸ்தூரியார் வீதி)

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன நாகரீகத்திற்கேற்ற நங்கையர் விரும்பும்

நைலெக்ஸ், ஹூலி, ரூபிகுயின்

எல்லா நிறங்களிலும் பிளவுஸ் பீஸ்கள்

மற்றும்

ஆடவர்களுக்கேற்ற சேட்டிங் - சூட்டிங்

சிறுவர்களுக்கான றெடிமேற் பிடவைகளுக்கும்

கணேசன் பட்டுச்சோலை

201, காங்கேசன்துறை சாலை,

யாழ்ப்பாணம்.

யாழ் நகரில்

துவிச்சக்கர வண்டிகள் அதன் உதிரிப்பாகங்கள்

மண்ணெண்ணை அடுப்பு வகைகள்

இன்னும் தங்கள் தேவை எதுவானாலும் நாடுங்கள்

கணபதி களஞ்சியம்

இல. 18, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடையோம்

வெள்ளிவிழா மலர் சிறப்புற!

- வாழ்த்துரை வழங்கிய பெரியோர்களுக்கும்.
- ஆக்கங்கள் வழங்கிய கல்விமான்களுக்கும்.
- விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்.
- அன்பளிப்பு வழங்கிய பெற்றோர்களுக்கும், அபிமானிகளுக்கும்.
- புகைப்படங்கள் எடுத்துதவிய ஒளிப்பட கலையகத்தினருக்கும் (K. S. R.)
- அட்டைப்படம் தலைநகரில் அச்சிட உதவிய ஆசிரியர் சு. சுந்தரலிங்கம் அவர்களுக்கும்
- புகைப்பட புளொக் தலைநகரில் செய்திட உதவிய செல்வன் தி. தேவபிரதாபன் அவர்களுக்கும்.
- வாரிவளவு நல்லியக்கச்சபை செயலாளர் பட்டு மாமாவிற்கும்.
- அட்டைப்பட ஓவியம் வரைந்த கலைஞர் "லங்கா" விற்கும்.
- அட்டைப்படம் அச்சிட்ட கொழும்பு லக்சுமி அச்சகத்தினருக்கும்.
- மலரை அச்சிட்ட யாழ். மகா லக்சுமி அச்சகத்தினருக்கும்.
- யாழ். பாலர் கல்விக் கழகத்தினருக்கும்.

மற்றும் பலவழிகளில் உதவிய அனைவருக்கும்
மனமார்ந்த நன்றிகள்.



பாடசாலை ஆசிரியைகளும்

மலர்க்குழுவினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா மலர் சிறப்புற

அன்பளிப்புச் செய்தோர் விபரம்

	பெயர்கள்	இடம்	தொகை
1	கு. இராமச்சந்திரன்	திருநெல்வேலி	500.00
2	ப. பிறேமச்சந்திரன்	யாழ்ப்பாணம்	100.00
3	துவாரகன் களஞ்சியம்	யாழ்ப்பாணம்	150.00
4	க. அருளானந்தம்	காரைநகர்	250.00
5	ஆ. சுப்பிரமணியம்	காரைநகர்	500.00
6	திருமதி. மஞ்சுளா ஜீவலிங்கம்	கொழும்பு	100.00
7	திருமதி. தனலட்சுமி ஸ்ரீஸ்கந்தராசா	லண்டன்	1875.00
8	திருமதி. சித்திரா வேலாயுதம்	யாழ்ப்பாணம்	100.00
9	செல்வி. கு. சசிகலா	யாழ்ப்பாணம்	100.00
10	செல்வி. க. றாகினி	யாழ்ப்பாணம்	100.00
11	செல்வி. த. வன்னியசிங்கம்	யாழ்ப்பாணம்	1300.00
12	செல்வி. இ. தமயந்தி	யாழ்ப்பாணம்	100.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா மலர் சிறப்புற

அன்பளிப்பு செய்த பெற்றோர் விபரம்

	பெற்றோர் பெயர்	தொகை
1	திருமதி. திருமகள்ச்செல்வி. முத்துலிங்கதாஸ்	950 - 00
2	திரு. த. ஞானதேசிகன்	450 - 00
3	திரு. சி. செல்வராசா	350 - 00
4	திரு. ந. ஆறுபொறிபரன்	250 - 00
5	திரு. சி. செந்தில்நாதன்	350 - 00
6	திரு. இ. பத்மநாதன்	500 - 00
7	திரு. பெ. சிவஞானம்	250 - 00
8	திரு. சி. பாலசிங்கம்	250 - 00
9	திரு: ம. பழனி	250 - 00
10	திரு. சு. இரத்தினசிச்கம்	300 - 00
11	திரு. தி. பாலசூரியன்	250 - 00
12	திருமதி. சாந்தினி ஜெகதீஸ்வரன்	750 - 00
13	திரு, வி. ஸ்ரீஸ்கந்தராசா	250 - 00
14	திரு. நா. மகாலிங்கம்	250 - 00
15	திரு: மு: சுப்பிரமணியம்	450 - 00
16	திரு. க. கனகசுந்தரம்	250 - 00
17	திரு. க. செல்லத்தம்பி	250 - 00
18	திரு. ஐ ஜீவதயாபரன்	750 - 00
19	திரு. சு. நிமலேஸ்வரன்	1250 - 00
20	திரு. ந. குமரேஸ்வரன்	250 - 00
21	திருமதி. பொன்சிலர் ஜெகசோதி	550 - 00
22	திரு. க. மகேந்திரராஜா	500 - 00
23	திரு. மு. கந்தையா	250 - 00
24	திரு. ப. லோகேஸ்வரன்	250 - 00
25	திரு. சி, காயம்பு	200 - 00
26	திரு. க. ஜெகதீஸ்வரன்	1250 - 00
27	திரு. கு. சரவணநாதன்	250 - 00
28	திரு. கா. விவேகானந்தன்	250 - 00
29	திரு. தி. குணராஜா	350 - 00
30	திரு. ம. இரகுநாதன்	250 - 00
31	திரு. சி. ஞானசுப்பிரமணியம்	500 - 00
32	திரு. சு. உருத்திரசிங்கம்	500 - 00
33	திருமதி. சித்திராங்கன்	250 - 00
34	திரு. வே. சிவசுப்பிரமணியன்	500 - 00
35	திரு. ச. சந்திரமோகன்	500 - 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36	திரு. லியோன் அன்ரனிராஜா	300 - 00
37	திரு. த. காங்கேயபிள்ளை	250 - 00
38	திரு. நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்	200 - 00
39	திரு. ந. குகனேஸ்வரன்	250 - 00
40	திரு. கா. அருள்தாஸ்	250 - 00
41	திரு. இ. விவேகானந்தா	250 - 00
42	திருமதி. ரஞ்சினி அகிலன்	250 - 00
43	திரு. பா: பழனிவேல்	250 - 00
44	திரு. மு நடராசா	400 - 00
45	திரு. க. சற்குணானந்தன்	250 - 00
46	திரு. பொ. குணலேந்திரன்	350 - 00
47	திரு. சி. மகேஸ்வரன்	250 - 00
48	திரு. செ. யோகராசா	250 - 00
49	திரு. நா. பத்மநாதன்	250 - 00
50	திரு. இ. பரமேஸ்வரன்	250 - 00
51	திரு. பா. லோகேஸ்வரன்	250 - 00
52	திரு. க. யோகேந்திரா	250 - 00
53	திரு. பொ. விக்னேஸ்வரபாலன்	250 - 00
54	திரு. தம்பித்துரை	250 - 00
55	திரு. மு. பரமானந்தம்	250 - 00
56	திரு. அ. ஸ்ரீபத்மராசா	250 - 00
57	திரு. ம. இராசதுரை	200 - 00
58	திரு. கு. பாபு	300 - 00
59	திரு. ந. கந்தசாமி	250 - 00
60	திரு. த. சந்திரராசா	250 - 00
61	திரு. தி. பாலச்சந்திரன்	250 - 00
62	திரு. இ. கனகசபை	250 - 00
63	திரு. சி. ஜெயகாந்தன்	250 - 00
64	திரு. சு. செல்வரத்தினம்	1000 - 00
65	திரு. கு. சிவானந்தன்	250 - 00
66	திரு. க. குலசிங்கம்	250 - 00
67	திரு. தி. நித்தியானந்தன்	250 - 00
68	திரு. சி. நகுலேந்திரராஜா	350 - 00
69	திரு. இ. இராமநாதன்	250 - 00
70	திரு. ந. இராகவன்	200 - 00
71	திரு. மு. தனபாலசிங்கம்	250 - 00
72	திரு. சு. இராசசேகர்	200 - 00
73	திரு. வை. கந்தசாமி	250 - 00
74	திரு. க. மனோகரன்	200 - 00
75	திரு. த. கதிர்காமநாதன்	200 - 00
76	திரு. சு. சற்குணராசா	150 - 00
77	திரு. அமிர்தலிங்கம்	150 - 00
78	திரு. சி. முருகையா	500 - 00
79	திரு. சோ. இராசேந்திரன்	200 - 00
80	திரு. சோ. அமலகுமார்	250 - 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் அனைத்து
சுபமுகூர்த்தப்பட்டு பருத்திப் புடவைக் கடல்

திருமாட்டி
புடவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

விசேட சுப காரியங்களுக்குத் தேவையான பனாரஸ்,
காஞ்சிபுரம், மைசூர் சில்க், பெங்களூர் சில்க்,
பட்டு வேட்டிகள், சேட்டிங், சூட்டிங் அனைத்துப்
பிடவைத் தினிசுகளுக்கும்

திருமாட்டி பிடவைக் கடல்

TIRUMATI
TEXTILE OCEAN

122, Power House Road,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவி ஒளி கானம்

(சுப்பஸோ வீடியோ சென்ரர்)

உங்கள் மங்கள வைபவங்களை வீடியோ படமாகவும்
நிழற்படங்களாகவும் பிடித்துத் தருபவர்கள்
பழைய, புதிய திரைப்பாடல்களை ஒலிப்பதிவு
செய்து தருபவர்கள்,
மின்சார உபகரணங்கள் திருத்திக் கொடுப்பவர்கள்

ரவி ஒளி கானம்

(சுப்பஸோ வீடியோ சென்ரர்)

100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

LUXMI PRINTER

மகா லக்சுமி அச்சகம், 127, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org